REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 358 கார்த்திகை 08ஆம் நாள் திங்கட்கிழமை 23 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## புதியதொரு அரசமைப்பை கூட்டமைப்பும் தயாரிக்கிறது


மட்டக்களப்பு, நவ. 23
இலங்கை அரசு முன்னெடுத்து வரும் புதிய அரசமைப்புக்கான வேலைத்திட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யோசனைகள் அடங்கிய புதிய வரைவு ஒன்றைத் 18 ➤

## முல்லைத்தீவு, வடமராட்சி ஊடாக புயல் நாளை கரையைக் கடக்கலாம்

### இன்று மழையுடனான காலநிலை

சிவப்பு எச்சரிக்கையும் விடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் புய லாக மாறவே வாய்ப்புண்டு. இந்தப் புயல் (இந்தப் புயல் நிவார் என்று 18 ➤




முச்சந்தி முரளி

"கொரோனா, டெங்கு, புயல் எண்டு எல்லாம் கூட்டணி சேர்ந்து எங்களுக்கு குலைப்பன் அடிக்க வைக்குதுகள் கண்டியளோ"



## தவறான முடிவெடுத்து தனிமைப்படுத்தலில் இருந்தவர் இறப்பு

கிளிநொச்சி, நவ. 23
தனிமைப்படுத்தலில் இருந்தவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் செட்டிக்குளம் 18 ➤

## தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். கோண்டாவில் வடக்கில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. தவராஜசிங்கம் 18 ➤

## ஏணைகட்ட ஏறி தவறி விழுந்த குடும்பத்தலைவர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, நவ. 23
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இருட்டுமடு பகுதியில், பிறந்து பத்து நாள்களேயான தனது குழந்தைக்கு ஏணை கட்டுவதற்காக ஏறிய குடும்பத்தலைவர் தவறி வீழ்ந்ததில் உயிரிழந்தார். 36 வய 18 ➤

# இலங்கையில் இனப்படுகொலையை தடுப்பதற்கு தவறியது ஐ.நா.சபை!

## 20,000 தாண்டியது கொரோனா

17 ➤



### ஒபாமா சாடல்

கொழும்பு, நவம்பர் 23
இலங்கை போன்ற நாடுகளில் இனப் படுகொலைகளைத் தடுக்க ஜக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது. 'உறுதியளிக்கப்பட்ட நிலம்' என்னும் தனது நினைவுத் தொகுப்பு நூலில் ஐ.நாவின் கையாகலாகாத்தனத்தை இவ்வாறு பதிவு செய்திருக்கிறார் பராக் ஒபாமா. 18 ➤

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

### ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் வருவது அவசியமில்லை!

*வடக்கு கல்வி அமைச்சு அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், நவ. 23
பாடசாலைகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் ஆரம்பப் பிரிவு வகுப்புகளுக்குரிய ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டிய அவ 18 ➤

## புலிகள் மீதான தடையை நீக்க வழக்குத் தாக்கல் செய்யுங்கள்

*தமிழ்க் கட்சிகளிடம் மனோ கோரிக்கை*

கொழும்பு, நவ. 23
'புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குமாறுகோரி இலங்கை நீதிமன்றத்தில் சுமந்திரன், விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வழக்குத் தாக்கல் செய்ய 17 ➤

## பஸில் எம்.பியானதும் அமைச்சரவை மாறும்

கொழும்பு, நவ. 23
பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றதை அடுத்து அமைச்சரவையும் மறுசீரமைக்கப்படும் என்று தெரியவருகின்றது. இதை மெய்ப்பிக்கும் வகையில் தொழில்நுட்பம், பொதுமக்கள் பாதுகாப்பு என்னும் இரு அமைச்சுக்கள் ஜனாதிபதியால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. 18 ➤

# சாவகச்சேரியில் இறந்தவருக்கு கொரோனா அல்ல டெங்கே!

### வடக்கை நெருங்குகிறது அடுத்த அபாயம்

யாழ்ப்பாணம், நவ. 23
சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தவர் கொரோனாவால் இறந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்ட நிலையில் அவர் டெங்குக் காய்ச்சல் காரணமாகவே உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் 18 ➤

# மாவீரர்களின் தியாகங்களுக்கு நாம் தலை வணங்குகின்றோம்

## கூச்சல்களுக்கு மத்தியில் சபையில் கஜன் பொன்னம்பலம்

கொழும்பு, நவ. 23

தமிழ் அரசியல் நாட்காட்டியில் மிக முக்கியமானதும் புனிதமானதுமான வாரத்தின் முதல் நாளில் எமது மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் தேசத்துக்காகவும் போராடி தமது உன்னதமான உயிர்களையே தியாகம் செய்த அந்த உன்னதமானவர்களுக்கு எமது தலைகளை சாய்த்து மரியாதைகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.



வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் உரையாற்ற ஆரம்பித்ததும் சரத் பொன்சேகா குழப்ப முற்பட்டார்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது, இங்கு இருக்கும் பிரச்சினைகள் அனைத்தையும் அபிவிருத்தி மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என்று ஜனாதிபதியும் பிரதமரும் பல தடவைகள் கூறியிருந்தார்கள். அதனால், இந்த அரசு சிலவேளைகளில் அபிவிருத்தியில் கரிசனை கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

முப்பது வருடகால போரால் வடக்கு, கிழக்கு முற்றாக அழிக்கப்பட்டு, வடக்கு, கிழக்கு மக்களின் பொருளாதாரம் முற்றாக சிதைக்கப்பட்டிருந்தது என்கிற உண்மையை ஏற்று ஆகக்குறைந்தது பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்களிலாவது இவர்கள், போரால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் தனித்துவமான பொருண்மிய பிரச்சினையையாவது அங்கீகரித்து ஏற்று நேர்மையாக செயற்படுவார்கள் எனும் எதிர்பார்ப்பு ஒன்று இருந்தது.

### ஆக்கிரமிப்பு

ஏறத்தாழ முப்பத்திரண்டு ஆண்டுகள் வடக்கு கிழக்கில் கொடுமையான பொருளாதார தடை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. பொருளாதார தடையால் வடக்கு கிழக்கில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ஏறத்தாழ ஆயிரத்து 500 ரூபா வரை சென்றிருந்தது.

வடக்கு கிழக்கின் பொருளாதாரத்தின் மிக முக்கிய கூறுகளான மீன்பிடித்தொழிலையோ விவசாயத்தையோ செய்ய முடியாத அளவுக்கு இந்த பொருளாதார தடை மூலம் முடக்கப்பட்டார்கள்.

வடக்கு கிழக்கின் பெரும்பகுதி விவசாய நிலங்கள் மக்களுக்கு அனுமதியற்ற பிரதேசங்களாக ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தன.

இங்கே இப்போது இருக்கின்ற சரத் பொன்சேகா யாழ் மாவட்டத்தளபதியாக இருந்த காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தின் ஏறத்தாழ 30 வீதமான பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயம் எனும் பெயரில் இராணுவம் தனது கட்டுப்பாடின் கீழ் ஆக்கிரமித்து வைத்திருந்தது.

(இந்த வேளையில் சரத் பொன்சேகா மீண்டும் குறுக்கிட்டார். அதற்கு உங்களது பதில் ஒன்றும் இங்கு தேவையில்லை, இது எனக்குரிய நேரம், நான் சொல்வதை கேட்டுக்கொண்டு அமைதியாக உட்காரவும் என கஜேந்திரகுமார் கூறி அவரது குறுக்கீட்டை மீறி தன் உரையைதொடர்ந்தார் )

இந்த முப்பது வருட கால போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போது, இந்த நாட்டில் நிலவிய தமிழர்களின் பிரச்சினை தொடர்ந்தும் இருந்தது என்பதையும் அரசும் இராணுவமும் மிக கொடூரமான குற்றங்கள் இழைத்திருந்தார்கள் எனும் குற்றசாட்டையும் ஒரு விவாதத்திற்காக ஒரு புறம் வைத்துவிட்டு, ஆகக்குறைந்து வடக்கு கிழக்கின் பொருளாதாரத்தையாவது கட்டியெழுப்புவார்கள் என பார்த்தால், அதுவும் நடக்கவில்லை.

### ஏன் மறுதலிப்பு?

அபிவிருத்தி என வரும்போது, போரால் அழித்தொழிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசத்தை தனித்துவமாக அணுகுவதற்கு ஏன் இந்த அரசு மறுதலிக்கிறது ? போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என வடக்கு கிழக்கை அறிவித்து அங்கே வசிக்கின்ற மிக மிக பாதிப்புக்குள்ளான நலிவுற்ற மக்களையும் அவர்களின் பொருண்மியத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க ஏன் இந்த அரசு பின்னிற்கிறது ? அதன் மூலம் எதிர்காலத்திலாவது அவர்கள் தமது வாழ்வை நிலை நிறுத்திக்கொள்ள முடியும் ?

முப்பது வருடம் போரை எதிர்கொண்டு அழிக்கப்பட்டு நலிவுற்ற வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதாரம் பாதுகாக்கப்பட்டு கட்டியெழுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதை உள்ளளவில் இடது சாரியாக கருதிக்கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவாவது உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அதுகூட நடைபெற்றிருக்கவில்லை.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணுதல், போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் என்பவற்றோடு, அபிவிருத்தி எனும் அம்சத்திலும் இந்த அரசு தோல்வியடைந்திருக்கிறது.

இந்த நாட்டில் இருக்கும் ஒவ்வொரு அங்குள்ள நிலத்தையும் விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும் என நிதியமைச்சர் கேட்டிருந்தார். அது உண்மையில் நியாயமானது. போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மெல்ல மெல்ல இப்போது தான் மீளெழுந்து வருகிறார்கள். ஆனால் அந்த மக்கள் திட்டமிடப்பட்ட - கட்டமைக்கப்பட்ட வகையில் அவர்களின் சொந்த நிலங்களில் இருந்து இப்போதும் விரட்டப்பட்டு வருகிறார்கள். ஒவ்வொரு அங்குள்ள நிலத்தையும் விவசாயத்துக்கு பாவிக்க வேண்டும் என்பதை கொள்கையாக பேசும் இந்த அரசு ஏன் அந்த மக்களின் சொந்த நிலத்தை பயன்படுத்துவதை அனுமதிக்க மறுத்து அவர்களை விரட்டியடிக்கிறது, என்று கேள்வி எழுப்பினார்.

(இதைத் தொடர்ந்து அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூச்சல் குழப்பத்துக்கு மத்தியில் கஜேந்திரகுமாரின் உரை நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது) (ஒ.இ)

# உலக மீனவர் தினம் முல்லையில் கடைப்பிடிப்பு

முல்லைத்தீவு, நவ.23

உலக மீனவர் தினம், மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு, 'நீல பொருளாதார சவால்களுக்கு மத்தியில், மக்களுடைய உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக பலமான சமூக இயக்கத்தைக் கட்டி எழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில், முல்லைத்தீவு மாவட்ட செஞ்சிலுவைச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.



நிகழ்வில் தற்காலத்தில் சட்டவிரோத தொழில்களாலும், வெளிமாவட்ட மற்றும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களாலும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள இடர்பாடுகள் தொடர்பில் பேசப்பட்டன. அவ்வாறு மீனவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளுக்கு உரிய அதிகாரிகள் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

நிகழ்வின் இறுதியில், முல்லைத்தீவு மீனவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளைத் தீர்த்துவைக்குமாறு கோரி மாவட்ட மீனவர்களின் சார்பில் மனுக்கள் கையளிக்கப்பட்டன.

இதில் வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உத்தியோகத்தர், மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் மற்றும் சம்மேளனம் என்பவற்றின் பிரதிநிதிகள், மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள் மீனவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (பு-246)

## ஐ.தே.க எம்.பி இன்று தீர்மானம்

கொழும்பு, நவ. 23

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்பி தொடர்பில் நாளை (இன்று) தீர்மானிக்கப்படும் என்று கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலில் எந்த ஆசனங்களையும் கைப்பற்றியிராத ஐ.தே.கவுக்கு தேசியப் பட்டியல் மூலமாக ஒரேயொரு ஆசனம் கிடைத்தது. தேசியப் பட்டியல் மூலம் எவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது என்பது தொடர்பில் ஐ.தே.க இன்று வரை அறிவிக்காத நிலையில் இன்று அந்த முடிவு தெரியவரும். (ம-இ)

## கொரோனாவிலிருந்து விடுபட வழிபாடுகள்!

யாழ்ப்பாணம், நவ. 23

கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து விடுபடுவதற்காக கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

நாளை காலை 6 மணிமுதல் 7 மணிவரை இந்த வழிபாடுகள் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-இ)

## தகனம் செய்வதே சாத்தியமான வழி

கொழும்பு, நவ. 23

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதே ஒரேயொரு சாத்தியமான வழி என அரசாங்கம் நியமித்துள்ள நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார். கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வது சாத்தியமா என்பதை ஆராய்வதற்காக அரசாங்கம் நியமித்த குழு இது குறித்து ஆராய்ந்துள்ள நிலையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## சுன்னாகத்திலும் ஹோம பூசை

யாழ்ப்பாணம், நவ.23

உலக மக்கள் அனைவரதும் நலன் வேண்டி முன்னெடுக்கப்படும் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தில் சிவஸ்ரீ ப.ஜெயகுமாரக்குருக்கள் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

பட்டதாரி பயிலுநர் பதவி

# நிராகரிக்கப்பட்டவர்களுக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, நவ.23

**அரசாங்கத்தின் பட்டதாரி பயிலுநர் மற்றும் டிப்ளோமாதாரி பயிற்சி வேலைத் திட்டத்தின் நியமனத்தின்போது நிராகரிக்கப்பட்டு மீண்டும் மேன்முறையீடு செய்தவர்களின் விண்ணப்பங்களை மீளப் பரிசீலித்து நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஊழியர் சேமலாப நிதிய அங்கத்துவம் கொண்டிருத்தல், தொழிலில் ஈடுபட்டிருத்தல், களனி பல்கலைக் கழக பட்டச் சான்றிதழ் பெற்றிருக்காமை முதலான காரணங்களால் நியமனம் வழங்குவது மறுக்கப்பட்ட பட்டதாரிகள் சமர்ப்பித்த மேன்முறையீட்டு விண்ணப்பங்களின் தகைமையை பரிசீலித்து அவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

முறைப்பாடு செய்யப்பட்ட பின் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தொழில் வழங்குவது தொடர்பாக எதிர்காலத்தில் கொள்கை அளவிலான தீர்மானம் எடுக்கப்படும். வேறுபாடுகள் பாராது நியமனங்கள் வழங்கப்படுவதுடன் 2019 ஆம் ஆண்டு நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் விரைவில் நிரந்தரமாக்கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## போலிப் படையினர் பொலிஸால் கைது

கொழும்பு, நவ.23

பொலிஸ், இராணுவம் எனக் கூறி மோசடிகளில் ஈடுபட்டு வந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

பொல்பித்திகம பகுதியில் இராணுவ சிப்பாய் என்றும், புலனாய்வு பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் என்றும் தங்களை போலியான முறையில் அடையாளப்படுத்தி மோசடிகளில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்பித்திகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (வ-இ)

## 6 பொலிஸ் பிரிவுகள் இன்று தனிமையிலிருந்து விடுவிப்பு

கொழும்பு, நவ.23

தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டவற்றில் 6 பொலிஸ் பிரிவுகள் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைந்ததையடுத்து வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதிப்பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் பொரளை, வெல்லம்பிட்டி, கொம்பனிவீதி மற்றும் கோட்டை ஆகிய பொலிஸ் பிரிவுகளும், கம்பஹா மாவட்டத்தில் கடவத்த மற்றும் ஜாஎல ஆகிய பொலிஸ் பிரிவுகள் இன்றிலிருந்து வழமைக்குத் திரும்பவுள்ளன.

எனினும் பொரளை பொலிஸ் பிரிவில் வணாத்துமுல்ல கிராமசேவகர் பிரிவும், கொம்பனி வீதி பொலிஸ் பிரிவில் வேகந்த கிராமசேவகர் பிரிவும் தொடந்தும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும். கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் தொடர்ந்தும் 18 பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## காரைநகரில் கவனயீர்ப்பு

காரைநகர், நவ.23

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் காரைநகர் ஊர்காவற்றுறை பிரதேசங்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டு வரும் பாதை சேவையை தடங்கல் இல்லாமல் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி காரைநகர் இறங்குதுறையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று பொதுமக்களால் இன்று காலை 8 மணியளவில் முன்னெடுக்கப்படவுள்ளது. (வ-27)



ராமஞ்ஞ மஹா நிகாயவின் மஹாநாயக்கர் அக்கமஹாபண்டிதர் நாபாண பேமசிறி அபிதான தேரரின் பூதவுடலுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ச தனது இறுதி மரியாதையை செலுத்தினார். (வ-இ)

## மாங்குளம் விபத்தில் சிப்பாய் சாவு

முல்லைத்தீவு, நவ. 23

முல்லைத்தீவு மாங்குளம் மணவாளன் பட்டமுறிப்பில் மோட்டார்சைக்கிளில் பயணித்த சிப்பாய் மாட்டுடன் மோதுண்டு இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது.

மதவாச்சியைச் சேர்ந்த பத்திரனாயக்க சமிங்க (வயது- 37) என்ற சிப்பாயே உயிரிழந்தார். அவர் மாங்குளம் பகுதியில் நிலை கொண்டுள்ள 57 ஆவது படைப் பிரிவில் பணிபுரிகின்றார். (கு-19,113)

## கொரோனா தடுப்பூசி கண்டுபிடிப்பில் இலங்கை பேராசிரியர் மகேஷி ராமசாமி

கொழும்பு, நவ. 23



இலங்கையில் பிறந்த பேராசிரியர் மகேஷி ராமசாமி, வேகமாக பரவி வரும் கொவிட் - 19 வைரஸுக்கு எதிரான தடுப்பூசி குறித்த பிரிட்டனின் ஆராய்ச்சியில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் முன்னணி ஆராய்ச்சியாளராக உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் பிறந்த இவர், பிரிட்டனில் மருத்துவம் பயின்றார். கொவிட் 19 வைரஸுக்கு எதிரான தடுப்பூசி கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியில் முன்னோடியாக இருந்து வருகிறார். பேராசிரியர் மகேஷி ராமசாமியின் பெயர் தடுப்பூசி தொடர்பான மருத்துவ பணிகளில் முதலிடத்தில் உள்ளது என்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-இ)

விபத்தில்

## படுகாயமடைந்த சிறுமி உயிரிழப்பு

மட்டக்களப்பு,நவ.23

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி, தேத்தாதீவில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து, சிகிச்சை பெற்று வந்த சிறுமி நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்தார்.

பிரதான வீதியை குறுக்கிட்டு, கடைக்குச் சென்று திரும்பிய சிறுமியை, சிறிய ரக லொறி மோதித்தள்ளியது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமி மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

தேத்தாதீவைச் சேர்ந்த 7 வயதுடைய மயில்வாகன் சனுஸிகா என்பவரே விபத்தில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-46)



## சட்டத்தை மீறாமல் நினைவுகூரலாம்

எம்.பி இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

ஹற்றன், நவ.23

சட்டத்தை சவாலுக்கு உட்படுத்தாமல் நினைவேந்தல் நிகழ்வை நடத்த முடியும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பொது வெளியில் ஒன்றுகூடி நினைவேந்தல் நடத்துவதற்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. எனினும், தனிநபர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உயிரிழந்த உறவுகளை நினைவுகூரலாம்.

ஆனால், நீதிமன்ற தீர்ப்பையோ அல்லது தனிமைப்படுத்தல் சட்டத்தையோ சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில் செயற்படக்கூடாது என்றார். (வ-44)

# மாவீரர் நாளுக்கான தடை தமிழரை கிளர்ந்தெழச் செய்யும்

*மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன்*

முல்லைத்தீவு,நவ.23

**மாவீரர் நாளுக்கான தடை என்பது, எமது தமிழ் மக்களிடையே ஒரு வலுவான தமிழ்த்தேசியப் பற்றுதலை உண்டுபண்ணுவதுடன், தமிழர்களை எழுச்சி கொண்டு கிளர்ந்து எழச் செய்யும் செயற்பாடு என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தால் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனுக்கு மாவீரர் நாளுக்கான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பிறப்பிக்கப்பட்டுள்ள தடைக்கட்டளையை முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்றுமுன்தினம் ரவிகரனது இத்துக்குச் சென்று கையளித்திருந்தார்.

குறித்த தடைக்கட்டளையைப் பெற்றுக்கொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மாவீரர் நாளுக்கான தடை விதிக்கப்படவில்லை. அதற்கு முன்னரும் தடைகள் எவையும் விதிக்கப்படவில்லை. இந் நிலையில் தொடர்ச்சியாக நாங்கள் எங்களுடைய உறவுகளை எண்ணி கண்ணீர் சிந்தி, அஞ்சலிக்கும் இந்த மாவீரர்நாளை தற்போதைய அரசாங்கம் தடைசெய்துள்ளது. அரசாங்கம் இவ்வாறு நடந்து கொள்வது பொருத்தமானதல்ல.

குறித்த மாவீரர் நாளுக்கான தடை என்பது, எமது தமிழ் மக்களிடையே ஒரு வலுவான தமிழ்த்தேசியப் பற்றுதலை உண்டுபண்ணுவதுடன், தமிழர்களை எழுச்சி கொண்டு கிளர்ந்து எழச் செய்யும் ஒரு செயற்பாடாகப் பார்க்கின்றேன் என்றார் .(ஐ-246)



## பிரதமர் அலுவலகத்தில் தொற்று என்பது பொய்

*குறிப்பிடுகின்றது ஊடகப் பிரிவு*

கொழும்பு, நவ. 23

பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையில் பணியாற்றும் எந்தவோர் ஊழியரும் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகவில்லை என்று பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொவிட்19 தொற்று நிலைமை காரணமாக அலரி மாளிகை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என வெளியாகிய செய்தி உண்மைக்கு புறம்பானதும் ஆதாரமற்றதுமாகும் என்றும் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கொவிட்-19 நிலைமைக்கு மத்தியில் அரசு மற்றும் சுகாதாரப் பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையின் நாளாந்த பணிகள் எவ்வித தடையுமின்றி முறையான சுகாதார வழிகாட்டல்களுடன் இயங்குகின்றன.

பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையின் பணிகளுக்கென, ஏனைய அரச நிறுவனங்களைப் போன்று சேவைகளை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், பசில் ராஜபக்ச தலைமையில் முன்னெடுக்கப்படும் ஜனாதிபதி செயலணியின் பணிகளும் எவ்வித தடையுமின்றி அலரி மாளிகை வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதமரின் பாதுகாப்புப் பிரிவுடன் தொடர்புடைய வெளிப்புற பிரிவினரே கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புப்பட்டுள்ளனர்.

பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையில் கடமையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் வழமைபோன்று கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஊடகப் பிரிவு குறிப்பிட் டுள்ளது. (த)

## வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா. நவ. 23

வவுனியா செட்டிகுளம் காந்திநகர் பகுதியில் குடும்பத் தலைவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். சின்னையா தெய்வேந்திரன் (வயது- 45) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

தனிமையில் வசித்து வந்த அவர் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடல மாகக் காணப்பட்டதை அவதானித்த அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்குச்சென்ற செட்டிகுளம் பொலிஸார் மற்றும் கிராம அலுவலர் விசாரணை மேற்கொண்டனர். (த-18)

## 22 கிலோ கஞ்சா தும்பளையில் மீட்பு

*உரும்பிராய் நபர் கைது*

யாழ்ப்பாணம். நவ. 22

வடமராட்சி தும்பளை யில் 22.4கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் நேற்று மதியம் மீட்கப் பட்டது. அதை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரைக் கைதுசெய்துள்ளோம் என்று போதைத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். அவர் வடமராட்சி தும்பளையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

மேலதிக விசாரணை மற்றும் சட்டநடவடிக்கைக்காக அவர் பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

## 'கொரோனா சாவு' தகவல்கள் நள்ளிரவில் வெளியாவதேன்?

கொழும்பு, நவ. 23

கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படும் இறப்புகள் தொடர்பான தகவல்கள் ஏன் நள்ளிரவில் வெளியிடப்படுகின்றன? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு வினா எழுப்பினார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான இந்த அரசுக்கு எந்தவொரு விடயத்திலும் வெளிப்படைத்தன்மை இல்லை. கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படும் இறப்புகள் தொடர்பாக இரவு 10.30 மணி செய்தியும் முடிவடைந்த பின்னரே அறிக்கை வெளியாகின்றது.

கடந்த சில நாள்களாக இவ்வாறுதான் நடைபெறுகின்றது. எனவே, மக்களுக்கு உரிய வகையில் தகவல்கள் சென்றடையக்கூடாது என்ற நோக்கில்தான் இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எமக்கு ஏற்படுகின்றது. என்றார். (த-44)

## எப்படியாவது நினைவேந்துவர்!

மன்னார், நவ. 23

மாவீரர் தினத்தை நினைவு கூருவதற்கு வடக்கு கிழக்கில் அரசு பல்வேறு தடைகளை விதித்துள்ள போதும், மக்கள் ஏதோ ஒரு வகையில் நினைவேந்தலை மேற்கொள்வார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலு வலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தல் இந்தவருடம் நடைபெற இருந்தமையால் தான் 2019 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகளில் பெரிய அளவில் அரசு தடை ஏற்படுத்தவில்லை. ஆனால் தற்போது கடந்த மாதம் தியாக தீபம் திலீபனுடைய நினைவேந்தலின்போதும், தற்போது மாவீரர் நினைவேந்தலுக்கும் தடை விதித்துள்ளனர்.

மேலும் இன்றிலிருந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஒரு வர்த்தமானி அறிவித்தலை கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தியுள்ளார். அதில், இலங்கையில் பொதுமக்களுடைய பாதுகாப்புக்கான முழுமையான பொறுப்பை இராணுவம் மற்றும் முப்படைகளிடம் ஒப்படைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு புதிதாக வந்த இந்த அரசு தமிழ் மக்களை ஓர் அச்ச உணர்வில், சுயமாக செயற்பட முடியாதவாறு வைத்திருக்கவே இவ்வாறு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு கிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்களை நசுக்கி அவர்களை மிரட்டி போரை தான் வழிநடத்தியபோது தமிழ் மக்கள் எப்படி அச்ச உணர்வுகளோடு இருந்தார்களோ அதே அச்ச உணர்வை தொடர்ச்சியாக தக்கவைத்து தங்களுடைய குடியேற்றங்களை குறிப்பாக தமிழ் மக்கள் அரசின் செயல்பாடுகளுக்கு எதிராக செயல்படாமல் விடுத்து அச்ச உணர்வு இருக்கின்றபோது வடக்கு கிழக்கில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை மிக விரைவாக செய்வதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் வைரஸ் போல் படிப்படியாக இராணுவ ஆட்சியைக் கொண்டு வருவதற்கான புதிய சூழ்நிலையை அரசு உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

இராணுவ அதிகாரிகள் செயலாளர்களாக இருக்கின்றார்கள், பொறுப்பாளர்களாக இருக்கின்றார்கள். பொது மக்களுடைய பாதுகாப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங் கையில் என்ன பயங்கரவாதம் இருக்கின்றது இலங்கையின் பாதுகாப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டமைக்கு என்ன காரணம் என நான் கேட்க விரும்புகின்றேன்- என்றார். (த-56.213)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிட்டுப் புலம்பல்கள்

முகப்புத்தகத்தை திறந்தாலே பிட்டுத் தொடர்பான பதிவுகள்தான் கொட்டிக் கிடக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நினைவு கூருவதற்குத் தடைகோரி பொலிஸார் பதிவுசெய்ய வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த வழக்கில் முன்னிலையான யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ, 'பிட்டும் வடையும் சோறும் சாப்பிட்டுக்கொண்டிருந்த யாழ்ப்பாணத்தவர்களை பீட்ஸா சாப்பிட வைத்துள்ளோம்' என்று தெரிவித்திருந்தார். இதையடுத்து அவரைக் கேலிசெய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'பிட்டு வதைகள்' அனுமனின் வால்போல் நீண்டு செல்கின்றன. 'பிட்டு சவால்' விடும் அளவுக்கு முகப்புத்தகத்தின் நிலை உள்ளது. ஆனால் உண்மையில் இந்த விடயம் சிங்கள பேரினவாதத்துக்குக் கிடைத்த வெற்றியேதவிர வேறொன்றும் இல்லை.

இந்த விவகாரத்தில் இரு விடயங்கள் தெளிவுபடுகின்றன. ஒன்று, இது ஒரு ஒப்புதல் வாக்குமூலம். அதாவது தமிழர்களின் மரபுகளை, கலாசாரத்தை, பண்பாட்டை சிறுகச்சிறுக அழித்து அதன்மூலம் அவர்களின் தனித்துவங்களை இல்லாமல் செய்கின்ற கபட நாடகத்தை அரசு மேற்கொள்கின்றது. மேற்கத்தேய கலாசாரத்தை தமிழர்களிடம் சிங்கள அரசு திட்டமிட்டே திணித்து வருகின்றது என்பதையே பிரசாத் பெர்னாண்டோவின் கருத்து ஆணித்தரமாக வெளிப்படுத்துகின்றது. அதாவது ஒரு மரத்தின் கிளைகளை படிப்படியாக வெட்டி அந்த மரத்தின் வேரை அழிப்பதற்கு நிகரான நிலை இது.

இரண்டாவது, இது மாவீரர் வாரம் என்பதை மறந்து ஒருவித கொண்டாட்ட மனோபாவத்துக்குள் இந்தப் பிட்டு எம்மை அழைத்துச் சென்றுள்ளது. இவ்வளவும்தானா தமிழ்த் தேசத்தின் மீதான எமது தாகம்?/ தமிழ்த் தேசத்தின் மீதான எமது பற்று?

பிரசாத் பெர்னாண்டோவின் கருத்துக்கள் நகைப்புக்குரியன, கண்டிக்கத்தக்கன என்பதில் இம்மியும் மறு கருத்தில்லை. ஆனால் அவரைக் கண்டிக்கின்றோம் என்ற போர்வையில் எம்மைநாமே தரம்தாழ்த்தி விடக்கூடாது. பிட்டுக்குக் கிடைத்த இந்தத் திடீர் வரவேற்பு சிங்கள பேரினவாதத்தால் கூர்ந்து கவனிக்கப்படுமானால் நாளை இதேபோன்ற பல்வேறுபட்ட 'ரெண்டிங்' விடயங்கள் திட்டமிட்டு அரசால் சமூக வலைத்தளங்களில் விதைக்கப்படும். எமது சிந்தனைகளைச் சிதறடிக்கும் வகையில், கொண்டாட்ட மனோநிலைக்குள் எம்மைக் கொண்டுசெல்லும் வகையில் திட்டமிட்டே கவனக் கலைப்பான்கள் எம்முன் பரவலாக்கப்படும். நாமும் சமூக வலைத்தளங்களில் கெத்துக் காட்டுகின்றோம் என்ற போர்வையில் அந்த கவனக்கலைப்பான்களைக் காவிக்கொண்டு திரிவோம். ட்ரெண்ட் ஆக்குவோம். சிங்கள பேரினவாத அரசு என்ன நினைத்ததோ அதை எம்மை அறியாமலேயே செய்துமுடிப்போம்.

சமூக வலைத்தளங்களின் பயனாளர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களே. இலகுவில் உணர்ச்சிப் பிரவாகம் அடைந்துவிடக்கூடிய தன்மை இளைஞர்களுக்கு உண்டு. அவர்களின் கரங்களில் இருக்கும் சமூக வலைத்தளங்கள் குழந்தைகளின் கைகளில் உள்ள கத்திகளுக்கு ஒப்பானவை. அந்தக் கத்தியால் நேரும் ஆபத்தானது குழந்தைக்கே அன்றி வேறு எவருக்கும் இல்லை. பொலிஸ் அதிகாரி பிரசாத் பெர்னாண்டோவின் கருத்துக்களைக் கண்டிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இளைஞர்களுக்கு உள்ளது. ஆனால் அவர்கள் அதை கொண்டாட்டமாக எதிர்கொண்டுவிட்டார்கள் என்பதுதான் வேதனை. தொலைநோக்கற்றவர்களாகச் செயற்படுவோமாக இருந்தால் இன்று பிட்டைப்போல் நாளை ரொட்டி வந்து நின்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# புதிய வழிகாட்டலின் கீழ் நாடு வழமைக்கு திரும்பும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



**கொழும்பு, நவ.23**

**நாட்டில் புதிய சுகாதார வழிகாட்டல்களின் கீழ் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கை வழமை நிலைக்குத் திரும்பவுள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது கொரோனா வைரஸ் தொற்று பரவுகின்ற போதும் தினசரி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறை உள்ளடக்கப்பட்ட புதிய அறிக்கை தயாரித்து சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதிக ஆபத்து, அவதானமிக்க மற்றும் சாதாரண இடங்களில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கான சுகாதார வழிகாட்டி ஒன்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் செயற்பாடு, பாடசாலை உட்பட கல்வி நிறுவனங்களின் நடவடிக்கைகளை சுகாதார பாதுகாப்புடன் செயற்படுத்தும் முறைகளும் அந்த சுகாதாரவழிக்காட்டியில்உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் முழுமையாக மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்ற நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி நோக்கி கொண்டு செல்லும் வகையில் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அனைத்து நிறுவனங்களின் நபர்களால் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் இந்த சுகாதார வழிக்காட்டியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

# சுகாதார அமைப்பு ஒப்புதல் வழங்கிய பின்னரே தடுப்பூசி

## அமைச்சர் நாமல் தெரிவிப்பு



கொழும்பு, நவ.23

கொரோனா வைரஸுக்கு எதிராக உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளித்த தடுப்பூசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளர்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிய கொரோனா வைரஸை குணப்படுத்துவதில் 95 வீதம் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ள ஒரு தடுப்பூசியை இறக்குமதி செய்ய அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பலர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரசு ஒருபோதும் உலக சுகாதார அமைப்பால் ஒப்புதல் வழங்கப்படாத தடுப்பூசியை மக்களுக்கு வழங்காது.

உலகம் முழுவதும் இந்த கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த போராடிக்கொண்டிருக்கும் நிலையில் மருத்துவ அதிகரிகள், அரச ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து நோயைக் கட்டுப்படுத்த முடிந்தது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசு எடுத்த முடிவுகளின்படி, தொற்றுநோயின் இரண்டாவது அலைகளையும் வெற்றிகரமாக கட்டுப்படுத்த முடிந்துள்ளது - என்றார். (எ-22)

# சிலாபம் மீன் சந்தை ஒரு வாரத்துக்கு பூட்டு

கொழும்பு, நவ.23

கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் சிலாபம் பொது மீன் சந்தை ஒரு வார காலத்திற்கு மூடப்பட்டுள்ளது என சந்தையின் செயலாளர் கே.பி.சந்தன குமார தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

சிலாபம் பொது மீன் சந்தைக்கு வந்தோரில் 50 பேருக்கு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 4 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சிலாபம் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார்உள்ளிட்ட அதிகாரிகள் குழு சிலாபம் நகர சபை கட்டத்தில் நேற்றுமுன்தினம் இது தொடர்பில் கூட்டம் நடாத்தியது. அதில் பொதுச் சந்தையை ஒருவார காலம் மூடுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

அதேவேளை, சிலாபத்திலுள்ள மீனவர்கள் மீன்களை சிலாபம் நகரிலுள்ள துறைமுகத்துக்கு அருகில் விற்பனை செய்ய முடியும். என்றார். (எ-இ)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2020
"புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்." - தோமஸ்அல்வா எடிசன்

# சேர். பொன் இராமநாதனின் 90ஆவது குருபூசை நிகழ்வு



யாழ்ப்பாணம், நவ.23
சேர். பொன் இராமநாதனின் 90ஆவது குருபூசை நிகழ்வு யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள பார்வதி சமேத பரமேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூஜை, வழிபாடுகள் நடத்தப்பட்டதுடன், பல்கலைக்கழகத்துக்குள் இருக்கும் சேர். பொன் இராமநாதனின் உருவச் சிலைக்கும், சபா மண்டபத்தில் உள்ள உருவப் படத்துக்கும் துணைவேந்தரால் மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.
பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை, ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை மற்றும் யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.
நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் ,பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், துறைசார் தலைவர்கள், கல்விசாரா ஊழியர்கள் கலந்து கொண்டனர். (எ-20)

# கொரோனா பரவாது என்று உத்தரவாதம் வழங்க முடியாது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.23
**மேல்மாகாணத்திலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் அளிக்க முடியாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினது செயலாளர் வைத்தியர் ஷெனல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது
மேல்மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கொரோனாத் தொற்றுத் தொடர்பான முழுமையான தகவல்களையும் வழங்க வேண்டும். இல்லையெனில் மேல் மாகாணத்தில் இருந்து ஏனைய பிரதேசங்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படாது என்ற எந்த உத்தரவாதமும் அளிக்க முடியாது.
மேல் மாகாணம் மிகவும் ஆபத்தான பகுதியாக இருப்பதால், கொரோனாத் தொற்றாளர்கள் குறித்த முழுமையான தரவுகள் உடனடியாகச் சேகரிக்கப்பட வேண்டும்.
மேல் மாகாணத்திற்கென விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு கொரோனாத் தொற்றாளர்களின் தனிப்பட்ட விவரங்களும் தாமதமின்றிச் சேகரிக்கப்பட வேண்டும்.
இது நோயாளர்களுக்கான சிகிச்சைகளை தாமதமின்றி வழங்குவதற்கு வழி ஏற்படுத்துவதுடன், புதிய தொற்றாளர்களை உடனடியாக அறிந்து கொள்வதற்கு இலகுவாக இருக்கும்.
இதுவரை கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்பான எந்தவொரு தரவுகளும் மேல்மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் சேகரிக்கப்படவில்லை.
இது மேலும் ஆபத்தான நிலைமைக்கே வழிவகுக்கும் என்றார். (எ-44)

## கிளிநொச்சியில்

# மருத்துவர் உள்ளிட்ட 70 பேர் தனிமையில்

கிளிநொச்சி, நவ.23
கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 70 பேர் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், அதில் மருத்துவர் தாதியர்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
குறித்த பகுதியில் நேற்றுமுன்தினம் கொவிட் 19 நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவருடன் தொடர்புகளைப் பேணியதன் அடிப்படையிலேயே குறித்த 70 பேர் வரையானோர் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
தொற்றுக்குள்ளான நோயாளி
தருமபுரம் வைத்தியசாலையில் வயிற்று வலி காரணமாகச் சிகிச்சை பெற்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் அந்த மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர், தாதியர்கள் மூவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இரண்டு மருத்துவர்களைக் கொண்ட மருத்துவமனையில் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பதில் கடமையாற்றவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-6)

# இன்று தொடக்கம் விசேட அலுவலக ரயில் சேவைகள்

கொழும்பு, நவ. 23
சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய இன்றுமுதல் விசேட அலுவலக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.
ரயில்வே திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இன்று முற்பகல் மற்றும் பிற்பகல் வேளையில் விசேட அலுவலக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.
மேலும் குறித்த ரயில்கள் யாவும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் நிறுத்தப்படமாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதன்படி பிரதான ரயில் மார்க்கங்கள்ஊடாக கொழும்பு கோட்டையில் இருந்து பொல்கஹவெல ரம்புக்கண கண்டி கனேவத்த மஹவ ஆகிய பகுதிகளில் ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன எனவும், அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)



# மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் தீபிகா முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 23
இந்தவருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் ஆழியவளை சி.சி. தமிழ்க் கலவன் பாடசாலையில் தோற்றிய மாணவி பாலகுமார் தீபிகா 191 புள்ளிகளைப் பெற்று அந்தக்கோட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.
கஷ்டப் பிரதேசத்திலுள்ள இந்தப்பாடசாலையிலிருந்து இந்தமுறை புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 24 மாணவர்களில் 8 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளைத் தாண்டி சித்தியடைந்துள்ளார்கள்.
இதேவேளை, உடுத்துறை ஆரம்பப்பிரிவு பாடசாலையில் 7 மாணவர்களும், கேவில் அ.த.க. பாடசாலையில் 3 மாணவர்களும், கட்டைக்காடு றோ.க. தமிழ்க் கலவன் பாடசாலையில் 2 மாணவர்களும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் 2 மாணவர்களும், மாமுனை அ.த.க. பாடசாலையில் 2 மாணவர்களும், நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் 2 மாணவர்களும், குடத்தனை கரையூர் றோ.க. தமிழ்க் கலவன் பாடசாலையில் 2 மாணவர்களும், செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையில் ஒரு மாணவருமாக மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் 29 மாணவர்கள் இந்த முறை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்துள்ளார்கள். (து- 22, 173)

# மீனவ தினத்தை முன்னிட்டு மன்னாரில் சிறப்புக் கூட்டம்

உலக மீனவ தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் சிறப்பு ஒன்றுகூடல் ஒன்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட காரியாலயத்தில் இடம் பெற்றது.
தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் தலைமையில் இந்த ஒன்றுகூடல் நடைபெற்றது.
நிலம் மற்றும் கடல் வளச் சுரண்டலில் இருந்து மீனவ சமூகத்தைப் பாதுகாத்தலும் நிலைபேறான மீன்பிடி கொள்கையை உருவாக்குதலும் எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஒன்றுகூடலில் எல்லை கடந்த இந்திய மீனவர்களில் வருகை மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.
நாட்டில் நடைமுறையில் உள்ள மீனவர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் மீனவர்கள் பின் பற்ற வேண்டிய பல்வேறு சட்ட முறைகள் தொடர்பாக கடற்றொழில் நீரியல் திணைக்களத்தின் பரிசோதகர் பவனிதி ஊடாக விசேட தெளிவுபடுத்தல்களும் வழங்கப்பட்டன.
இந்த ஒன்றுகூடலில் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மீனவ சமாச தலைவர்கள், வடமாகாண மீனவ இணைய அங்கத்தவர்கள் மற்றும் மீனவ பெண்கள் குழுவினர் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப கலந்துகொண்டனர். (எ-56)



# கண்ணீர் விட்டு அஞ்சலிப்பதை எந்த அரசாலும் தடுக்கமுடியாது

## ஜனநாயகப் போராளிகள் கட்சி அறைகூவல்

யாழ்ப்பாணம், நவ.23

**மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு வடக்கு கிழக்குப் பகுதிகளில் பலருக்கு பொலிஸாரால் நிதிமன்றத் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது. தடையுத்தரவு பெற்றுவிட்டால் எம்மவர்களின் நினைவுகளை எம்மில் இருந்து அகற்றிவிட முடியும் என்று நினைப்பது அரசாங்கத்தின் அறிவின்மையே என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் ந.நகுலேஸ் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கார்த்திகை 27 மாவீரர் தினம். இது வெறுமனே சாதாரண நினைவு தினமல்ல எமக்காக உயிர்த்தியாகம் செய்த எமது உறவுகளை, அவர்களின் தியாகத்தை எண்ணி அவர்களுக்காக அஞ்சலிக்கும் நாளாகும். கடந்த காலங்களில் இதனை நாங்கள் பலவாறு அனுஷ்டித்து வந்தோம். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் இந் நிகழ்வுக்குத் தடைவிதிக்கப்படுகின்றது. இவ்வருடம் கொரோனாவைக் காரணம் காட்டி இந்த அரசாங்கம் தமிழ் மக்களுடைய அனைத்து நிகழ்வுகளுக்கும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், படுகொலை நினைவேந்தல்கள் மற்றும் தற்போது மாவீரர் தினம் என அரசாங்கத்தால் விதிக்கப்படும் தடையுத்தரவுகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. மக்களின் உணர்வு சார்ந்த விடயத்தை, சட்டத்தைக் கொண்டு அடக்கிவிடலாம் என்று நினைக்கிறது அரசாங்கம். மாவீரர் பெற்றோர்கள், குடும்ப உறவுகள், முன்னாள் போராளிகளுக்கு எமது வேண்டுகோள். எமது வீரமறவர்களின் நினைவு என்பது எமது உள்ளத்தில் எப்போதும் இருக்கின்ற விடயம். இதனைப் பொது வெளியில், உலகறியத்தான் அனுஷ்டிக்க வேண்டும் என்றில்லை. அவர்களின் தியாகங்களை எண்ணி எமது உள்ளத்தில் இருந்து எழும் கண்ணீர் கூட அவர்களுக்கான அஞ்சலிதான். இதனை யாரும், எந்த அரசாங்கமும் தடுக்க முடியாது - என்றார். (ப)



# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு

மட்டக்களப்பு, நவ.23

காத்தான்குடி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக பிரிவிலுள்ள பாடசாலைகள் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், அவற்றுக்கு டெங்கு புகை விசிறல் நடவடிக்கை இடம் பெற்றது.

மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எம்.எம்.பசீர் தலைமையில் இந்த நடவடிக்கை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.எம்.றகுமத்துல்லா, சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக வெளிக்கள உத்தியோகத்தர்கள், காத்தான்குடி நகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப)



# ஒரு கி.மீ வீதி அபிவிருத்தி கொண்டச்சியில் ஆரம்பம்

மன்னார், நவ.23

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கொண்டச்சி கிராமத்துக்கான ஒரு கிலோ மீற்றர் உள்ளக வீதி 31.71 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

"ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் ஒவ்வொரு வீதி" எனும் தொனிப் பொருளின் கீழ் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற விஷேட வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது. அதனடிப்படையிலேயே நேற்று குறித்த வீதியின் அபிவிருத்தியும் ஆரம்பிக்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் அந்த வீதியின் அபிவிருத்தி பணியை ஆரம்பித்து வைத்தார். (ப)

# வேலணை - சரவணை வீதியும் அபிவிருத்தி

கொடிகாமம், நவ.23

அரசின் ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் வேலணை சரவணை கிழக்கு ஜே/20 கிராம அலுவலர் பிரிவிலுள்ள முருகையா வீதி சீரமைப்புக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரின் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர், நிறைவேற்றுப் பொறியிய லாளர் ஆர். இராதாகிருஸ்ணன், வேலணை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் பிரணவன், ஜே / 20 சரவணை கிழக்கு கிராம அலுவலர் பத்மஸ்ரீ மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

1.5 கிலோமீற்றர் நீளமான குறித்த வீதியானது 46 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரின் மேற்பார்வை யில் காப்பெற் வீதியாகச் சீரமைக்கப்படவுள்ளது. (ப-159)



# மூத்த நூலகர் பணியிலிருந்து ஓய்வு

யாழ்ப்பாணம், நவ.23

உள்ளூராட்சி சேவையில் 33 வருடங்கள் சிரேஸ்ட நூலகராகவும், சிறந்த எழுத்தாளராகவும் பணியாற்றிய பார்த்தசாரதி விஜயகுமார் தனது அரசாங்க சேவையிலிருந்து நேற்று ஓய்வுபெற்றார்.

வடமாகாண உள்ளூராட்சி சேவையில் பல நூலகப் பணியாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியதுடன் நூலகம் சார்பான கட்டுரைகளை காலத்துக்குக் காலம் வெளியிட்ட ஓர் எழுத்தாளராகவும் அவர் திகழ்ந்தார். இறுதியாக வலி. மேற்கு பிரதேச சபையின் சங்கானை பொது நூலகத்தில் இருந்து 33 வருடங்கள் தரம் 2 அலுவலர் தரத்தில் மகத்தான பணியாற்றி நேற்று அவர் ஓய்வு பெற்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-50)



# மஞ்சளுடன் இருவர் கைது

மன்னார், நவ.23

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் எடுத்துவரப்பட்ட மஞ்சள் மற்றும் கஞ்சாவுடன் இருவர் மன்னார் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், எருக்கலபிட்டி பகுதியைச் சேர்ந்த இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரிடமும் இருந்து 721 கிலோ 500 கிராம் மஞ்சள் மற்றும் 3 கிலோ 730 கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-213,56)

# இலங்கைத் தமிழர் பிரான்ஸில் கொலை

பரிஸ், நவ.23

பிரான்ஸ் பரிஸ் புறநகர் பகுதியான வல்துவாஸ் மாவட்டத்திலுள்ள குசன்வில் பகுதியில் இலங்கைத் தமிழர் ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த 56 வயதான பொன்னையா ஜீவராஜா என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இவர் கடந்த நவம்பர் 18ஆம் திகதி அவரது வீட்டில் வைத்துத் தனது நண்பர்கள் மூவரால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளார் என சர்வதேச செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களும் இலங்கைத் தமிழர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)





## வவு. பாடசாலைகளில் தொற்று நீக்கி விசிறல்

வவுனியா, நவ.23

மூன்றாம் தவணைக்காகப் பாடசாலைகள் இன்று ஆரம்பமாவதை அடுத்து வவுனியா பாடசாலைகளில் நேற்று தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியா, நகரசபையின் முகாமைத்துவ உதவியாளர் து.சபேசனின் மேற்பார்வையின் கீழ் வவுனியா நகரசபையால் நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் தொற்று நீக்கிகள் விசிறப்பட்டன. (ப-18)

## ஆற்றில் மூழ்கி ஒருவர் மாயம்

பதுளை, நவ.23

ஹப்புத்தளை ரத்கரவ்வ ஓய ஆற்றில் நேற்றுக்காலை குளிக்கச் சென்ற இளைஞர், நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். அவரைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார், சுழியோடிகள் ஈடுபட்டுள்ளனர்.

கந்தகம என்ற இடத்தைச் சேர்ந்த சந்துன் தில்ஷான் (வயது26) என்ற இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். எட்டுப் பேர் குளிக்கச் சென்றிருந்தனர் என்றும், ஏழுபேருர் மீண்டுள்ள நிலையில் ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் ஹப்புத்தளைப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து பொலிஸாரும், தியத்தலாவை இராணுவ முகாமைச் சேர்ந்த சுழியோடிகளும் ரத்கரவ்வ ஓய ஆற்றிற்குச் சென்று, தேடுதல்களில் ஈடுபட்டனர். (ப)

## அச்செழு பாடசாலையில் நால்வருக்கு சிறந்த சித்தி

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்ப்பாணம் அச்செழு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் இந்தமுறை வரலாற்றுச் சாதனை பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பாடசாலையில் எட்டு மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். நால்வர் வெட்டுப்புள்ளியைத் தாண்டி சித்திபெற்றனர். க.சஷ்வினி 170, வி. மகிழினி 166, சு.கோபிகா 164, நா. கவின்சன் 164. இவர்களைவிட மற்றைய நான்கு மாணவர்களும் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)

# தொற்று நீக்காது பயணிகள் சேவை; சாரதி, நடத்துநருக்கு எச்சரிக்கை

பருத்தித்துறை நவம் 23

கிருமித் தொற்றுத் தொடர்பான சுத்திகரிப்பு மேற்கொள்ளாத பயணிகள் வாகனம் பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் தடுத்து நிறுத்தப்பட்டு அதன் சாரதி மற்றும் நடத்துநருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வாகனத்தில் ஏறியிருந்த பயணிகள் இறக்கப்பட்டு வாகனத்தில் கிருமித் தொற்று நீக்கப்பட்ட பின்னர் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நகரப்பகுதியில் இடம்பெற்றது.

பயணிகள் சேவையில் ஈடுபடும் வாகனங்களை அடுத்த சேவைக்கு முன்னர், கிருமித் தொற்று விசிறப்பட்டே சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்ட போதிலும், குறித்த வாகனம் கிருமித் தொற்று நீக்கப்படாத நிலையில் மீண்டும் சேவையில் ஈடுபடவுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து, பேருந்து நிலையத்துக்குச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விசாரணை மேற்கொண்டு இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ப-9)



## அல்ட்ரா ஸ்கானர் அன்பளிப்பு

முல்லைத்தீவு, நவ.23

சர்வதேச மருத்துவ நல நிறுவனத்தினால் (ஐ.எம்.எச்.ஓ) 5.6 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய அல்ட்ரா ஸ்கானர் முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனம் வடக்கு, கிழக்கில் கல்வி, சுகாதார மேம்பாட்டுக்காக கடந்த 15 வருடங்களாக பல உதவிகளைச் செய்துவருகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-222)

## கசிப்புக் குகை முற்றுகை; ஒருவர் கைது

வடமராட்சி, நவ.23



வடமராட்சி,யாக்கரு காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை கசிப்பு காச்சுவதற்குத் தயாரான இடம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு 1500 லீட்டர். கோடா மற்றும் உற்பத்திப் பொருள்கள் என்பன கைப்பற்றபட்டுள்ளன.

அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில், துன்னாலையைச் சேர்ந்த. 28வயதுடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டார். காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவினரால் அந்த முற்றுகைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டது. சந்தேகநபர் நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ப-26)

## குப்பி விளக்கில் படித்தும் மாவட்டத்தில் 2ஆம் நிலை

### புலமைப் பரீட்சையில் அசத்திய மாணவி

முல்லைத்தீவு, நவ.23





மாணவி ஒருவர் குப்பி விளக்கில் படித்து, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று, மாவட்டத்தில் இரண்டாம் நிலைக்கு வந்த சம்பவம் முல்லைத்தீவில், இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார் கட்டு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 13 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் நிசாந்தன் நிதர்சனா என்ற மாணவி 194 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தில் சாதனை படைத்துள்ளார்.

குரவில் பகுதியில் வாழ்ந்து வரும் இந்த மாணவியின் வீட்டுக்கு இதுவரை மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை. இதனால் குப்பி விளக்கில் படித்தே அந்த மாணவி மாவட்டத்தில் இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்காலத்தில் தான் ஒரு சிறந்த சட்டத்தரணியாக வந்து கிராமத்தில் பணிசெய்யவேண்டும் என்று நிதர்சனா தெரிவித்துள்ளார். (ப-19)

# கொரோனா வைரஸ் மாற்றமடைந்துள்ளதா?

## சுகாதார அமைச்சு ஆராய்வு



**கொழும்பு,நவ.23**
**கொரோனா வைரஸின் தன்மை மாற்றமடைந்துள்ளதா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதான மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதால், மேலும் விரைவாக தொற்றாளர்களை இனங்காண முடியும்.

எனினும் இதன் காரணமாக பி.சீ. ஆர். பரிசோதனைகளின் அளவு குறைவடையாது. குறுகிய காலத்தில் நாளொன்றுக்கு 20 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுப்பதே எமது இலக்காகும். மினுவாங்கொடை கொத்தணியின் பின்னர் உருவாகிய புதிய கொத்தணிகளில் தொற்றாளர்கள் இனங்காணப்படும் அளவு குறைவடைந்துள்ளது. தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள அல்லது இதற்கு முன்னரே தொற்றுக்கு உள்ளானவர்களாவர். எனவே அவர்களில் காணப்படும் வைரஸின் அளவு குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

எதிர்வரும் இரு வாரங்களில் தற்போதுள்ளதை விடவும் அளவு மேலும் குறைவடையும் என்று எதிர்பார்க்கின்றோம். வைரஸ் உருவாக்கம் என்பது பிரதிகள் எடுப்பதைப் போன்றதாகும். வைரஸ் உடலினுள் சென்றதன் பின்னர் புரோட்டினைப் பயன்படுத்தி அதன் பிரதிகளை உருவாக்கும். இதன் காரணமாக வைரஸின் தன்மையும் மாறுபடக் கூடும்.

அதற்கமைய வைரஸ் விரைவில் அழியக் கூடிய நிலைமையும் ஏற்படும். எனவே தான் கொரோனா வைரஸின் தன்மை மாற்றமடைந்துள்ளதா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது. என்றார். (க-இ)



# ஹாட்லி மைந்தர்களின் நினைவாக குருதித்தானம்

யாழ்ப்பாணம்,நவ.23
ஹாட்லி மைந்தர்களது 21 மற்றும் 16 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு குருதித்தானம் வழங்கப்பட்டது.

வடமராட்சி இன்பர்சிட்டி கடற்பகுதியில் 1999ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்த, கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நான்கு பேரின் 21 ஆவது ஆண்டு, மற்றும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீட மாணவனாகக் கல்வி கற்று வந்தவேளை, ரயில் விபத்தில் உயிரிழந்த மாணவனது, 16 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் கடந்த வாரம் நடத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற, குருதிக்கொடை முகாமில், பழைய மாணவர்கள் உள்ளிட்டோர் குருதித் தானம் செய்தனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினரது அனுசரணையில், குருதிக்கொடை முகாம் நடத்தப்பட்டது. (க-20)

# அரசோடு ஆடும் சிவில் நிர்வாகம்

## கரைச்சி பிரதேச சபை தவிசாளர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,நவ.23
தற்போது சிவில் நிர்வாகம் அரசையும், அரசோடு இயங்கும் இயந்திரங்களையும் பாதுகாக்கின்ற ஓர் செயல்முறையாக மாற்றப்பட்டிருக்கின்றதே தவிர, மக்களுடைய விருப்பங்களுக்கு வழிவிடுகின்ற வழிமுறைகளைக் கொண்டிருக்கவில்லை.

இவ்வாறு கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

தவிசாளரின் அலுவலக அறையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்றால், மாவீரர் நாள் நிகழ்வு களில் பங்குபற்றக்கூடாது எனும் வகையில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நினைவுகூருதல் என்பது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ள செயன்முறையாக அந்த கட்டளையிலே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை நீதித்துறையின் தவறாக நான் காணவில்லை. ஆட்சியாளர்கள் எதை நினைக்கின்றார்களோ அதை பிரதிபலிக்கின்ற செயன்முறையாக தான் நான் பார்க்கின்றேன்.

சாதாரண மக்களின் வணக்க நிகழ்வைத் தடுக்க முனைவது பொருத்தமற்ற மன நிலையின் வெளிப்பாடாக இருக்கும்.

இந்த விடயங்களில் பொலிஸாரும், அரசின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இது உண்மையான சிவில் நிர்வாகத்தினுடைய வெளிப்பாடாக அமைந்திருக்கவில்லை. என்றார். (க-113)

25.35 பில்லியன் ரூபா

# புதிய நாணயத்தாள்களை அச்சிட்டது மத்திய வங்கி

கொழும்பு,நவ 23
இலங்கை மத்திய வங்கி, 25.35 பில்லியன் ரூபா, பெறுதி மதியான, புதிய நாணயத் தாள்களை அச்சிட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. கடந்த மார்ச் மாதம் கொரோனாத் தொற்றால் நாடு பெரும் பொருளாதார நெருக்கடி நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதுவரை 491.67 பில்லியன் ரூபா புதிய நாணயத் தாள்களை அச்சிட்டுள்ளது. இந்த மாதத்தில் மட்டும் 81.15 பில்லியன் ரூபா புதிய நாணயத் தாள்களை அச்சிட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. (க-இ)



# தரப்படுத்தலில் சஜித் முதலிடம்

கொழும்பு,நவ.23
2020 ஒக்ரோபரில் மிகவும் செயற்பாட்டு ரீதியான நாடாளுமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முதலிடம் பிடித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய தரவுகளைச் சேகரித்து ஆய்வு செய்யும் Manthri.lk இணையத்தளம் இந்தத் தரப்படுத்தலை மேற்கொண்டுள்ளது.

இந்தத் தரப்படுத்தலில் அநுர குமார திசாநாயக்க இரண்டாம் இடத்திலும், மஹிந்தானந்த அளுத்கமகே மூன்றாம் இடத்திலும், ஹர்ஷ டி சில்வா நான்காவது இடத்திலும், மொஹமட் அலி சப்ரி ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

2020 ஒக்ரோபர் 6 முதல் 23 வரை நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டங்களில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கிய பங்களிப்புகளின் அடிப்படையில் தரப்படுத்தல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. (க-இ)

# ஒரு வாரத்துக்கானதல்ல 5,000 ரூபா கொடுப்பனவு

## விமல் விசனம்



கொழும்பு,நவ.23
ஒரு வாரத்துக்குள் செலவு செய்வதற்காக 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மக்களுக்கு வழங்கப்படவில்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் இல்லை. அவர்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர் என்று மனோ கணேசன் நாடாளுமன்றில் சுட்டிக் காட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மூடப்பட்டுள்ள கொழும்பு மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபாவை, அவர்கள் ஒரு வாரத்துக்குள் செலவு செய்து விட்டு, தற்போது எதுவும் இல்லை என்று கூறுகின்றனர். கொழும்பு மாவட்டச் செயலரிடம் விசாரித்த பின்னரே, இதனை நான் கூறுகின்றேன். என்றார். (க-இ)

# பொருளாதார நிலைமைகளை வெளிப்படுத்தத் தவறியது அரசு

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.23
வரவு செலவுத் திட்டத்தில் சில நல்ல திட்டங்கள் இருந்தாலும், நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நிலைமைகளை அரசு வெளிப்படுத்தவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
நாட்டின் தற்போதைய பொருளாதார சிக்கல்களால், பெருமளவு நிறுவனங்கள் அடுத்த ஆண்டு மூடப்படவுள்ளன. பலர்வேலையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினையை



எவ்வாறு கையாளப்போகிறது என்பது குறித்து அரசு பேசவில்லை. மேலும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் நாளாந்த ஊதியத்தை நம்பி இருக்கும் மக்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவிலும், அரசு சிரமத்தை எதிர் கொள்கிறது.
இந்தத் திட்டத்தைத் தொடர முடியாவிட்டால், மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.
இதேவேளை வரவு - செலவுத் திட்டத்தில் ஓய்வூதிய வயதை 60 ஆக உயர்த்துவதற்கான திட்டம் வரவேற்கத்தக்கது.
இருப்பினும், ஈ.பி.எஃப் கோருவதற்கான தகுதியான வயதை 60 ஆக நீடிக்கும்போது, அவர்களின் நோக்கம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. வரவு செலவுத் திட்டத்தில் விவ சாயம் போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்துவது பாராட்டத்தக்கது. என்றார். (க-இ)



# கல்வி நிறுவனங்களை திறக்க அனுமதிமறுப்பு

யாழ்ப்பாணம். நவ.23
பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக இன்று ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் தனியார் கல்வி நிலையங்களுக்கான அனுமதி வழங்கப்படவில்லை என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப தேசிய கொரோனா தடுப்புச் செயலணியின் தீர்மானத்துக்கு அமைவாக தடைசெய்யப்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் இன்று திட்டமிட்டபடி அரச மற்றும் தனியார் பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளன.
இந் நிலையில் தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுமதிகள் வழங்கப்படவில்லை. தேசிய மட்டத்தில் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் அவற்றுக்கான அனுமதி வழங்கப்படும் - என்றார். (ஐ)

# பசில் எம்.பியாக இடமளிப்பேன்

## ஜயந்த கெட்டகொட அறிவிப்பு

கொழும்பு,நவ.23
பசில் ராஜபக் ஷ நாடாளுமன்றுக்கு வருவது அவசியம். அதற்கு இடமளிக்கத் தயார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,



நாடாளுமன்றுக்கு வரவுள்ள தினத்தை பசில் இன்னும் வெளியிடவில்லை. அவர் தீர்மானத்தை எடுக்கும் தினத்தில் நானும் தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளேன்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சியை மாத்திரமல்ல, அரசை பசில் ராஜபக்சவாலேயே முன்னெடுத்துச் செல்ல முடியும். இதனால் அவர் நாடாளுமன்றத்தில் கட்டாயம் இருக்க வேண்டும்.
அதற்கு இடமளிக்கத் தயாராக உள்ளேன். என்றார்.
அதேவேளை பசில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்காக, ஜயந்த கெட்டகொட தனது பதவியை ராஜினாமா செய்யவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (க-இ)

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மற்றொரு சாட்சியின் தகவல்

கொழும்பு,நவ.23
முன்னாள் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன, உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற ஒரு மணி நேரத்துக்கு முன்னர் மூன்று தடவைகள், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தொடர்பு கொண்டார் என்று ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.
மைத்திரிபால சிறிசேனவின் பெஜட் வீதி வீட்டில், தொலைபேசி கட்டமைப்புத் தொகுதியில், இயக்குநராக, சேவையில் இருந்த விமானப்படை வீரரின் சாட்சியத்தில் இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன.
சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூரில் இருந்த போது, உயிர்த்த ஞாயிறன்று தாக்குதல்கள் நடத்தப்பட்டன.
அன்றைய தினம் முற்பகல் 7.59 மணிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன தொடர்புபட்ட தொலைபேசி அழைப்பு, 157 செக்கன்களும், மு.ப.8.01 க்கு தொடர்புபட்ட தொலைபேசி அழைப்பு 93 செக்கன்களும் நீடித்தது என்று விமானப்படை வீரர் சாட்சியமளித்தார்.
தாக்குதல்களின் பின்னரும் நிலந்த ஜயவர்தன, பிற்பகல் 1.10 மணிக்கு 687 செக்கன்கள் நீண்ட அழைப்பு உள்ளிட்ட பல அழைப்புக்களை எடுத்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (க-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** தலைமை அதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறும் நாள். பெண்கள் முயற்சியில் வெற்றி காண்பர். உறவினர்கள் உங்கள் உதவியை நாடுவார்கள். செலவுக்கேற்ற வரவு வரும்.

**இடபம்:** பணியிடப் பிரச்சினைகளின் காரணத்தைக் கண்டறியும் நாள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பல நாள் போட்ட திட்டம் நிறைவேறும். உறவினர் உதவுவர்.

**மிதுனம்:** வேலைகளை விரைந்து முடிக்கும்நாள். புதியபாதையில்செல்வீர்கள். மேலதிகாரியிடம் பாராட்டு பெறுவீர்கள். குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துபோகும்.

**கடகம்:** மிகவும் யோசித்து முடிவெடுக்க வேண்டிய நாள். முன் கோபத்தைக் குறையுங்கள். வியாபாரத்தில் வரவு சுமார்தான். பணியிடத்தில் நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டிவரும்.

**சிம்மம்:** வெற்றி பெறும் நாள். தாயாரின் உடல் நிலை சீராகும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் லாபம் வரும். வாகன வசதி பெருகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உண்டு.

**கன்னி:** உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டிய நாள். வீடு கட்டும் திட்டம் தள்ளிப் போகக்கூடும். புதிய வேலைக்கான முயற்சியில் முன்னேற்றம் உண்டு. வாகன வசதி பெருகும்.

**துலாம்:** தொழில் செய்வோருக்குச் சிறு பற்றாக் குறைகள் ஏற்படும் நாள். பணியாளர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். முயற்சிகள் வெற்றியடையும்.

**விருச்சிகம்:** பிறரின் குறைகளை தீர்த்து வாழ்த்து பெறும் நாள். சில பேச்சு வார்த்தைகள் நல்ல முடிவுக்கு வரும். பண வரவு சற்றே திருப்தி தரும்.

**தனுசு:** அலுவலகப் பணிகளைத் திறம்பட செய்து முடிக்கும் நாள். தேவையற்ற வகைகளில் நேரம் வீணாகும். பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** உடல் நலம் சீராகும் நாள். குடும்பத்தில் மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்னைகள் அகலும். திற மையான நிர்வாகத்தினால் நல்ல பெயரைப் பெறுவீர்கள்.

**கும்பம்:** முயற்சிக்குரிய பலன் நிறைவாய்க் கிடைக்கும் நாள். கலைத் துறையினர் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பர்.

**மீனம்:** தொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றமான நாள். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும். வெளிநாடுகளில் வசிக்கும் உறவினரிடமிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும்.

மாவீரர் வாரம் ஆரம்பம்;

# பொலிஸ் கெடுபிடியும் வவுனியாவில் தீவிரம்

வவுனியா, நவ.23

வவுனியாவில் மாவீரர் தினம் மற்றும் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு நீதிமன்றத்தால் தடை விதிகப்பட்ட பகுதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவீரர் நாள் வாரம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள நிலையில் பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.


வவுனியா நகரசபை முன்பக்கம், ஏ9 வீதி, மற்றும் வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாவீரர் நாளை முன்னிட்டு ஆர்ப்பாட்டம் மற்றும் நடைப் பயணம் மேற்கொள்ள 20-11-2020 தொடக்கம்



29-11-2020 வரை வவுனியா நீதிமன்றால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வவுனியா நகர சபை வாயில் முன்பாகவுள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபி, காணாமல் ஆக்கப் பட்டோரின் சுழற்சி முறையிலான போராட்டக்களம் என்பவற்றுக்கு முன்னால் பொலிஸார் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அப் பகுதிக்கு வருவோர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ப-18)



## சிவப்பு, மஞ்சள் கொடிகளை பறக்கவிட்டு நினைவேந்தல்

வவுனியா, நவ.23

மாவீரர் வாரத்தை முன்னிட்டு சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்கவிட்டு உணர்வு பூர்வமாக நினைவேந்தல் நடவடிக்கை வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக ஆர்ப்பாட்டம் மற்றும் நடைப் பயணம் செய்யாது,தனது வீட்டு வாசலில் சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்கவிட்டு தமது உறவுகளுக்கான நினைவேந்தல் வாரத்தை செ.அரவிந்தன் என்பவர் ஆரம்பித்துள்ளார்.

தனது வீட்டு வாசலின் முன்பகுதியில் கம்பங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்க விட்டுள்ள அவர், தனக்கு வழங்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையை மீறாத வகையில் இறந்த தனது உறவுகளை தான் நினைவு கூரவுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார். (ப-18)

## 'ஒரே நாடு ஒரே சட்டம்' ராஜபக்சக்களுக்கு பொருந்தாதா?

இம்ரான் எம்.பி விசனம்

கொழும்பு, நவ.23

ஒரே நாடு ஒரே சட்டம் நாட்டின் ஒரு பகுதியினருக்கு மாத்திரமா என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வி எழுப்பியுள்ளார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன்று அரசாங்கம் ஒரேநாடு ஒரேசட்டம் எனக் கூறினாலும் ராஜபக்ச சகோதரர்களின் ஆதரவாளர்களுக்கு ஒரு சட்டமும் ஏனையவர்களுக்கு இன்னொரு சட்டமுமே நடைமுற்றைப்படுத்தப்படுகிறது. கொரோனா அச்சத்தால் நாட்டின் பல பகுதிகளில் வணக்கஸ்தலங்கள் மூடப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் தமது ஜும்மா தொழுகையைக் கூட நிறைவேற்ற முடியாமல் உள்ளனர். தமிழ் சகோதரர்கள் தமது தீபாவளிப் பண்டிகைக்குக் கூடகோவிலுக்குச் செல்லமுடியாமல் இருந்தனர். ஆனால் பிரதமரின் பிறந்தநாளை முன்னிட்டு மூடப்பட்டுள்ள வணக்கஸ்தலங்களைத் திறந்து அவருக்கு ஆசி வேண்டி வழிபாடுகள் இடம்பெற்றன. குறிப்பாக பள்ளிவாயல்களில் உருவப் படம் எதனையும் முஸ்லிம்கள் காட்சிப்படுத்துவதில்லை ஆனால் பிரதமரின் பெரிய உருவப்படம் பள்ளிவாயல்களில் காட்சிப்படுத்தப்பட்டு துஆ பிராத்தனைகள் இடம்பெற்றுள்ளன. அதுபோன்று மாவீரர் நினைவுதினத்துக்கு நீதிமன்றங்கள் தடை விதித்துள்ளன. ஆனால் மக்கள் விடுதலை முன்னணியினர் இது போன்ற நினைவு தினம் அனுஷ்டிக்கும்போது எந்த ஒரு எதிர்ப்பும் வெளியிடப்படவில்லை. சிறுபான்மையினருக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் சட்டங்கள் பெரும்பான்மையினரைக் கட்டுப்படுத்துவதில்லை -என்றார். (ப)



## துயிலுமில்லத்திலும் படையினர் குவிப்பு

முல்லைத்தீவு, நவ.23

மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் முழுமையாக நீதிமன்றத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு தேராவில் துயிலும் இல்லத்தில் படையினர் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

துயிலும் இல்ல வாயிலில் வீதித் தடை போடப்பட்டு துப்பாக்கி ஏந்திய படையினரும், பொலிஸாரும் வீதியின் இருமருங்கிலும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சிவில் உடையில் புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (ப-19)

மாவீரர் நினைவேந்தல்;

## எம்.பிக்கள் உள்ளிட்ட எட்டுப் பேருக்கு தடை

வவுனியா, நவ.23

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு வவுனியாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 8 பேருக்கு நீதிமன்று தடைவிதித்துள்ளது. குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 106 (1) படியே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தோணிக்கல் வவுனியாவில் வசிக்கும் செல்வநாயகம் அரவிந்தன் , காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை யெபவதனா காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் செயலாளர் கோபாலகிருஸ்ணன் ராஜ்குமார், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கயேந்திரன், சிவபாதம் கயேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரர்களான சிவசக்தி ஆனந்தன் ,மருத்துவர்களான சிவமோகன் , பத்மநாதன் சத்தியலிங்கம், ஆகியோருக்கே இவ்வாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்றில் அறிக்கை செய்ய எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு மன்றுக்குச் சமூகமளிக்குமாறும் கட்டளையிடப்பட்டுள்ளது. (ப)

## உணவுப் பொருள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.23

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டைப் பகுதியில் வறுமையில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு சுமார் 2ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பிரான்ஸ் நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் மக்களால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளை நிலையத்தால் அந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. இதற்கான யாழ். மாவட்ட அமைப்பாளர் லயன் கலாநிதி நா.தநேந்திரன் உணவுப் பொருள்களை அண்மையில் வழங்கினார். (ப)



# அரசின் வரவு - செலவுத் திட்டம் இராணுவ மயமாக்கலின் இலக்கே

## லெனினிசக் கட்சி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.23

**புதிய அரசின் வரவு - செலவுத் திட்டம், ஆளில்லா விமானங்களை வைத்து எமது வீடுகளை வேவு பார்க்கும் இராணுவ மயமாக்கலை இலக்காகக்கொண்டதே என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தக் கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

தற்போது முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டுவரும் அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம், வாழ்க்கைச்செலவின் அதிகரிப்பாலும் ஏனைய அன்றாட நெருக்கடிகளினாலும் அல்லலுற்று வரும் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் ஆறுதல் தருவதாகவோ மாற்றுத்திட்டத்தை முன்வைப்பதாகவோ காணப்படவில்லை.

உத்தேச வருமானம் 1 லட்சத்து 88 ஆயிரத்து 600 கோடி ரூபா எனவும் செலவினம் 3 லட்சத்து 44ஆயிரத்து 100 கோடி ரூபா ஆகவும் உள்ள அதேவேளை துண்டுவிழும் தொகை 1 லட்சத்து 55 ஆயிரத்து 500 கோடி ரூபாவாகவும் உள்ளன. இதனை ஈடு செய்வதற்கு நாட்டு மக்களின் தலைகளில் கடன் சுமையை ஏற்றுவதைத் தவிர இன்றைய அரசாங்கத்துக்கு வேறு வழி இல்லை. கடந்த பல வரவு - செலவுத் திட்டங்களில் காணப்பட்டு வந்த வழமையான மக்கள் விரோதச் செயற்பாட்டையே இலங்கை நாடாளுமன்ற வரலாற்றின் இப்போதைய 75ஆவது வரவு - செலவுத் திட்டத்திலும் காண முடிகிறது. வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிப்பட்டியலைப் பார்க்கும்போது போர்க்காலத்தின் நினைவையே கொண்டு வருகின்றது. ஆகக்கூடுதலான தொகையான 355 பில்லியன் ரூபா பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்து நெடுஞ்சாலைகளுக்கு 330 பில்லியனும் ஏனைய அத்தியாவசிய விடயங்களான விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, நீர்ப்பாசனம், போக்குவரத்து போன்றவற்றுக்கு குறைவான ஒதுக்கீடுகளே ஒதுக்கப்பட்டுள்ளன. மிகவும் முக்கியத்துவம் பெறும் சுகாதாரத்துக்கு வெறும் 159 பில்லியனும் கல்விக்கு 126 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதேவேளை, ஜனாதிபதி பிரதமர் உள்ளிட்டவர்களின் விசேட செலவினங்களுக்காக 2,559 கோடி 74 லட்சத்து 76 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. இதன் மூலம் இவ் வரவு-செலவு திட்டம் நாட்டின் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கானதல்ல என்பதே எனத் தெரிகின்றது என்றுள்ளது. (ப)




## மீனவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

முல்லைத்தீவு, நவ.23

கொவிட்-19 தாக்கத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களில் 100 மீனவக் குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையுடன் எக்டோ நிறுவத்தினரால் அந்தப் பொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முள்ளிவாய்க்கால் மேற்கு, சிலாவத்தை, கேப்பாப்பிலவு, ஹிஜ்ஜிராபுரம்,ஆகிய கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கே இவ்வாறு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ப-19)



## 2ஆயிரம் மீனவர்களுக்கு உலருணவுப் பொருள்கள்

மட்டக்களப்பு, நவ.23

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அமுல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கால் தொழில் பாதிக்கப்பட்ட வாழைச்சேனை மீனவர்களுக்கான உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கல்முனைகுடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மீனவ சமூகத்தினரால் சேகரிக்கப்பட்ட உலருணவுப் பொருள்கள் மற்றும் பிரதேச தனவந்தர்களின் அன்பளிப்புடன் வாழைச்சேனை அல் ஸபா மீனவர் அமைப்பு, அல் அமான் ஆழ்கடல் படகு உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்பன இணைந்து இந்த நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இரண்டாயிரம் பேருக்கு தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இவ்வாறு வழங்கப்படுகின்றன. (ப-150)



## திலீபனின் தூபியில் மாவீரருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ.23

தியாக தீபம் திலீபன் நல்லூரில் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் மாவீரர் நாள் ஆரம்ப தினமான நேற்றுமுன்தினம் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நவம்பர் 21 தொடக்கம் 27 ஆம் தேதி வரையான ஒரு வாரம் மாவீரர் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதற்கமைய தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடமான நல்லூர் கந்தன் ஆலய பின்பக்க வீதியில் மாவீரர் வாரத்தின் முதல் நாளான நேற்றுமுன்தினம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (ப-20)

## பதுளை மாநகரில் எண்மருக்கு தனிமை

கொழும்பிலிருந்து பதுளைக்கு வந்த எட்டுப்பேர், அவரவர்களின் வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பதுளை மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

பதுளை மாநகர சபைக்குட்பட்ட பதுளை பகலகம, கட்டுபெலல்லகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மேற்குறிப்பிட்ட எட்டுப்பேர் கொழும்பில் தமது உறவினர் வீடுகள் மற்றும் தமது சொந்தத் தேவைகள் கருதி அரச திணைக்கங்கள் ஆகியவற்றுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் சென்றிருந்த பிரதேசங்கள், கொரோனாத் தொற்றுக் குறித்து தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக்கப்பட்டுள்ளன. அத்துடன் குறிப்பிட்ட எட்டுப்பேரும் பதுளை மாநகருக்குட்பட்ட பிரதேசங்களின் அவரவர்களின் வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தியுள்ளனர். (ப)

## கள்ள நோட்டு விவகாரம்; இருவருக்கு விளக்கமறியல்

திருகோணமலை, நவ.23

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 41 ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகளை வைத்திருந்த இருவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற பதில் நீதிவான் முகம்மட் மஹ்ரூப் உத்தரவிட்டார். கந்தளாய், பேராறு பகுதியைச் சேர்ந்த 29 மற்றும் 27 வயதுடைய இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூதூர் பெரிய பாலம் பகுதியில் அமைந்துள்ள உணவு விடுதியொன்றில் வைத்து மூதூர் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டனர்.

ஐந்தாயிரம் ரூபா கள்ள நோட்டுகள் ஏழும், ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகள் ஐந்தும், ஐந்நூறு ரூபா கள்ள நோட்டுகள் இரண்டும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன. சந்தேக நபர்கள் பயன்படுத்திய கனணி,தொலைநகர்,பிரிண்டர் மற்றும் அச்சுப் பதிப்பு இயந்திரங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (ப)

## மரக்கன்றுகள் நடுகை

கிளிநொச்சி, நவ.23

'மரங்களை வளர்த்து சந்ததியைக் காப்போம்' எனும் தொனிப்பொருளில், கிளிநொச்சி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பயன்தரு மரக்கன்றுகள் நேற்று நடப்பட்டன.

வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனை, வட்டக்கச்சி மத்திய கல்லூரி மற்றும் வட்டக்கச்சி கட்சி லக்கிஸ்டார் விளையாட்டு மைதானம் போன்ற இடங்களில் இவ்வாறு மரக்கன்றுகள் நடப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் "கற்பகா மரநடுகைத் திட்டத்தின்" ஒரு அங்கமாக அந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி சமூக அபிவிருத்திப் பேரவை மற்றும் பல்வேறு கழகங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ப-222,113)



நேற்று வெளி வந்த கட்டுரையின் தொடர்ச்சி.....

# விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு இலங்கைக்கான சிறந்த விவசாய நடைமுறைகள்

(SL -Good Agricultural Practice)

SLGAP
DEPARTMENT OF AGRICULTURE - SRI LANKA

ஆக்கம்:
மு.விளம்பிதன்
விவசாயப் போதனாசிரியர்,
மாகாண விவசாயத்திணைக்களம்(வ.மா)

**3. B மட்டத்திலான சான்றிதழினை பெறல்**

1. B மட்டத்திலான SLGAP சான்றிதழினை பெற்றுக்கொண்ட பண்ணைகளில் விவசாய வியாபார ஆலோசனை உத்தியோகத்தர் உள்ளக கள ஆய்வினை மேற்கொண்டுGAPவிண்ணப்ப படிவத்தினை பிராந்திய விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பார்.

2. பிராந்திய விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை அலுவலகத்தில் GAP கள ஆய்வு உத்தியோகத்தர்கள் கள ஆய்வினை மேற்கொண்டு அறிக்கையினை பிராந்திய விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பார்.

3. பின்னர் GAP அத்தாட்சிப்படுத்தல் பிரிவு மேலதிக பணிப்பாளர் (விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை) அவர்களினால் A மட்ட GAP சான்றிதழ் வழங்கி வைக்கப்படும்.




4. சான்றிதழினைபெற்றுக்கொண்டபண்ணைகளின்பின்னூட்டல்நடவடிக்கைகள் மற்றும் விற்பனை ஒருங்கிணைப்பினை விவசாய வியாபார ஆலோசனை உத்தியோகத்தர் அல்லது மாகாண விவசாயத்திணைக்கள விவசாயப் போதனாசிரியர் அல்லது தொழினுட்ப உதவியாளர் மேற்கொள்வர்.

| மாவட்டம் | A மட்டத்திலானசான்றிதழ்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை | உட்பிரவேச சான்றிதழ்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 35 | 15 |
| கிளிநொச்சி | 08 | 30 |
| மன்னார் | 15 | 100 |
| முல்லைத்தீவு | 14 | 64 |
| வவுனியா | 13 | |

அட்டவணை 1:
மாவட்ட ரீதியான GAP உற்பத்தியாளர்கள்

தற்போது இந்த நடைமுறைகளைப் பின்பற்றி வடமாகாணத்தில் 88 விவசாயிகள் SLGAP சான்றிதழ் பெற்று நன்மையடைந்துள்ளதுடன் 209 விவசாயிகள் நன்மையை பெறவுள்ளனர். எனவே இந்த நடை முறைகளை பின்பற்றி தங்கள் பகுதி விவசாயப்போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு தாங்களும் ஒரு சிறந்த விவசாய நடைமுறை உற்பத்தியாளராகி நன்மைகளை பெற்றிடுவீர்.

முற்றும்



# குருபெயர்ச்சி பலன்கள்



குரு தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு செல்கிறார். குரு பெயர்ச்சி வாக்கிய பஞ்சாங்கபடி இந்த ஆண்டு 15.11 .2020 (ஞயிற்றுக்கிழமை) இரவு 11.48 மணிக்கு மகர ராசிக்கு மாறியிருக்கிறார். இந்த குருப்பெயர்ச்சி பலன்கள் ஒவ்வொரு ராசிக்குமான பலன்களை பார்ப்போம்.

### மிதுனம்

நல்ல பேச்சுவன்மையும் சிறந்த எண்ணமும் கொண்ட மிதுனராசி அன்பர்களே நீங்கள் எப்போதும் கலகலப்பாக இருப்பீர்கள். ஆச்சாரங்களைக் கடைபிடித்து வருவீர்கள். தெய்வ நம்பிக்கை உடைய நீங்கள் செய்யும் தொழிலில் கண்டிப்பும், கண்ணியமும் உடையவர்கள். சொந்த திறமையால் முன்னேற்றம் அடைய நினைப்பவர்கள். இதுவரை குருபகவான் உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளைச் செய்து கொண்டிருந்தார். உங்கள் செல்வாக்கு உயர்ந்திருக்கும். நினைத்ததை நிறைவேற்றி இருப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகரித்திருக்கும். தேவைகள் பூர்த்தியாகி இருக்கும். பொருளாதார வளம் மேம்பட்டிருக்கும். வீடுமனை வாங்கி இருப்பீர்கள் அல்லது வசதியான வீட்டிற்கு குடி புகுந்து இருப்பீர்கள். சிலர் வாகனம் வாங்கி இருக்கலாம். இந்த நிலையில் இப்போது குரு 8ஆம் இடத்திற்கு அடியெடுத்து வைக்கிறார்.

8ஆம் இடத்தில் இருக்கும் குருபகவான் பொதுவாக மனவேதனையும், நிலையற்ற தன்மையும் கொடுப்பார். பொருளாதார சரிவை ஏற்படுத்துவார். வீண்விரோதத்தை உருவாக்குவார்.

குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது7 ஆம் இடத்துப் பார்வை உங்களுக்கு சாதகமாக உள்ளது.

அந்த வகையில் உங்களுக்கு எந்த இடையூறுகள் வந்தாலும் அதை குருவின் பார்வை முறியடித்து வெற்றிக்கு வழிவகுக்கும். எனவே குரு சாதகமற்ற நிலையில் இருக்கிறாரே என்று நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். அவர் 2021 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்டம்பர் 14ஆம் திகதி வரை அதிசாரம் பெற்று கும்பராசியில் இருக்கிறார். இந்த காலக்கட்டத்தில் அவரால் நன்மைகள் கிடைக்கும். அவர் 2021 நவம்பர் 13ஆம் திகதி அன்று முழுபெயர்ச்சி அடைந்து 9ஆம் இடமான கும்பராசிக்கு மாறுகிறார். இது சிறப்பான இடம். அவரால் மனமகிழ்ச்சி அதிகரிக்கும். உற்சாகம் பிறக்கும். தடைபட்டு வந்த திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு. நினைத்த காரியத்தைச் வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தி ஆகும். குடும்பத்தில் இருந்து வந்த பின்னடைவுகள் மறையும். தம்பதியினர் இடையே ஒற்றுமை மேம்படும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். உங்களைப் புரிந்து கொள்ளாமல் இருந்தவர்கள் உங்கள் மேன்மையை அறிந்து சரணடையும் நிலை வரலாம். அதன்பிறகு 2022 ஏப்ரல் 14ஆம் திகதிஅன்று பெயர்ச்சி அடைந்து 10ஆம் இடமான மீனராசிக்கு மாறுகிறார். இது சிறப்பான இடம் இல்லை. அப்போது குரு பொருள் நஷ்டத்தையும், மன சஞ்சலத்தையும் ஏற்படுத்துவார்.

2021 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்டம்பர்14ஆம் திகதிவரை திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் எளிதில் கைகூடும். மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன்மனைவி இடையே இருந்து வந்த ஊடல் மறையும். காரிய அனுகூலம் ஏற்படும். உற்சாகம் பிறக்கும். அன்பு, பாசம் மேலோங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும் வீட்டுக்கு தேவையான சகல வசதிகளையும் பெறுவீர்கள். சிலர் சற்று முயற்சி எடுத்து புதிய வீடு கட்டுவர்.

உத்தியோகம் தனியார் துறையில் வேலை பார்ப்பவர்களுக்கு முயற்சியில்தடை ஏற்படும். அதிகமாக உழைக்க வேண்டியது இருக்கும். ஆனாலும் திறமைக்கு ஏற்ற கௌரவம் கிடைக்கும். சிலர் வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டுப் பிரியலாம். பொலிஸ், இராணுவத்தில்பணிபுரிபவர்கள் உயர்ந்த நிலையை அடைவர்.

2021 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்டம்பர் 14ஆம் திகதி வரை தடைகள், திருப்தியின்மை போன்றவை மறையும். வேலைபளு குறையும். விருப்பமான இடமாற்றத்தை முயற்சி செய்து பெற்று விடவும். சக பெண் ஊழியர்கள் மிகவும் ஆதரவுடன் இருப்பர். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

2021 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்டம்பர் 14ஆம் திகதி வரை பகைவர்களின் தொல்லையில் இருந்து விடுபடுவர்.

லாபம் அதிகரிக்கும். பணவரவுக்கு பஞ்சம் இருக்காது. குருவால் வங்கி கடன் எளிதாக கிடைக்கும். அரசு வகையில் அனுகூலம் காணப்படுகிறது. வளர்ச்சி இருக்கும். பெண்களை பங்குதாரராக கொண்ட வணிகம் சிறப்படையும் .பங்குவர்த்தகம் நல்லலாபத்தை தரும். சிலர் வணிகம் விடயமாக வெளிநாட்டுக்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். கூட்டுத்தொழிலில் நல்ல வளத்தைக் காணலாம்

### மாணவர்கள்

மாணவர்கள் முயற்சி எடுத்துப் படிக்க வேண்டியதாக இருக்கும். குருவின் பார்வை பலமாக இருப்பதால் முயற்சிக்கு தகுந்த பலன்கள் கிடைக்காமல் போகாது. 2021 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்டம்பர் 14ஆம் திகதி வரை சிறப்பான பலனைக் காணலாம். கல்வியில் சிறப்பு கிடைக்கும். மேல்படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும். ஆசிரியர்களின் உதவி பயன்உள்ளதாக அமையும்.

### பெண்கள்

தோழிகள் மிகவும் ஆதரவுடன் இருப்பர். கணவரிடம்விட்டுக்கொடுத்துப்போகவும். வேலைப்பளு இருக்கும். வேலையில் கவனம் தேவை. பெண்காவலர்கள் சிலர் உயர் பதவியை அடைய வாய்ப்பு இருக்கிறது. 2021 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்டம்பர் 14ஆம் திகதி வரை ஆடம்பர பொருட்களை வாங்குவீர்கள். மகிழ்ச்சியுடன் காணப்படுவர். சுபநிகழ்ச்சிகளில்கலந்துகொள்வர். புத்தாடை, அணிகலன்கள் வாங்கி குவிப்பர். பிறந்த வீட்டில் இருந்து உதவிகள் வரும். அண்டைவீட்டார்கள் உதவிகரமாக இருப்பர். வேலைக்கு செல்லும் பெண்கள் சிறப்பான பலனை பெறுவர். உடல்நலம் சிறப்பாக இருக்கும். சிலர்மன உழைச்சலுடன் காணப்படுவர்

தொடரும்..........

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாட சாலையில் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-05, புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி **161 புள்ளிகளைப்** பெற்றுச் சித்தியடைந்த எமது மருமகள்

**செல்வி**
**நந்தகுமார் வினுசியா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள், தந்தை, தாய் (நந்தன்-கிருபா) அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, மருமகள் தொடர்ந்து கல்வியில் மென்மேலும் முன்னேற வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**பீற்றர் மாமா, மதி அத்தை குடும்பம்**
**அவுஸ்திரேலியா.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-05, புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி **171 புள்ளிகளைப்** பெற்றுச் சித்தியடைந்த எமது மகள்

**செல்வி**
**சற்குணராசா தனலோஜினி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு மேலும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, அம்மம்மா, அத்தை, மச்சாள்மார், மச்சான்மார்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கே.பவிஷனா**
**164 புள்ளிகள்**



**ச.கர்சனா**
**162 புள்ளிகள்**



எமது பாடசாலையைச் சேர்ந்த மாணவச் செல்வங்களான **செல்வி கேதீஸ்வரன் பவிஷனா 164 புள்ளிகள், செல்வி சகாய ராசா கர்சனா-162 புள்ளிகள்** ஆகியோர் தரம்-05 புலமை பரிசில் பரீட்சையில் சித்திபெற்றமையைப் பாராட்டி மேலும் பரீட்சைகளில் சித்திபெற வாழ்த்துகின்றோம்.

அத்துடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
**செல்வன் செ.சாள்ஸ்கெவின் - 125 புள்ளிகள்**
**செல்வன் ற.சென்பிரஜீத் - 089 புள்ளிகள்** ஆகியோரையும் வாழ்த்துகிறோம்.
இவர்களுக்கு கற்பித்த ஆசிரியை **திருமதி ரஞ்சனா தவராஜா**, வழிப்படுத்திய அதிபர் **திரு. க. சத்தியானந்தன்** ஆகியோரையும் பாராட்டுகின்றோம்.

**பாடசாலை நலன்புரிச் சங்கம்,**
**யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை,**
**மிருசுவில்.**


# ஆர்.பி.ஜி செல் கண்டுபிடிப்பு



கிளிநொச்சி, நவ. 23

கிளிநொச்சி, முகமாலைப் பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த ஆர்.பி.ஜி செல் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை தேவாலயத்தின் தங்குமிடக் காணியை உழுது பண்படுத்தும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது

இதன்போதே அந்தக் காணியில் வெடிக்காத நிலையில் இருந்த ஆர்.பி.ஜி செல் கண்டுபிடிக்கப்பட்டது.

உரிய தரப்பினருக்கு அறிவித்து அதனை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(பு-6)


## சிறுநீரகம் தேவை

**O,B** இரத்த வகையை சேர்ந்த சிறுநீரகம் தேவை.

**தொடர்பு: 076 239 9874**

**வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்**
**பழைய புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்**

பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டு பாவிக்க முடியாத நிலையிலுள்ள புத்தங்களை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்பும் நிறுவனங்கள் உரிய விண்ணப்பப்படிவத்தினை யாழ் வலயக் கல்வி அலுவலக நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் (மு.ப. 8.30 - பி.ப 4.15 பெற்று பூரணப்படுத்தி 07.12.2020 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன.

**செல்வரட்ணம் சந்திரராஜா**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்.**

## நடேஸ்வர காங்கேசன்துறை ஐரோப்பிய பழைய மாணவர் சங்கத்தின் பாராட்டும், வாழ்த்தும்

கடந்த வாரம் வெளிவந்த 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் எமது பாடசாலை மாணவன் செல்வன் சாந்தகுமார் மதுஷாந்த் 170 புள்ளிகள் பெற்று சித்தி அடைந்தமையை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**சாந்தகுமார் மதுஷாந்த்**
170 புள்ளிகள்

இவ்வெற்றிக்கு துணைநின்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றோம்.
"மீள்குடியமர்வின் பின் பெற்ற முதல் வெற்றி
நீண்டு காக்கும் கனிஷ்ரவின் பெருமையை என்றும்"

**நடேஸ்வரக் கல்லூரி**
**ஐரோப்பிய பழைய மாணவர் சங்கம்**

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



**செல்வன். க.கபினாஷ்**
**168 புள்ளிகள்**

நூறாவது அகவையில் கால்பதிக்கும் **யா/காரை மெய்கண்டான் வித்தியாலயத்தில்** இவ்வாண்டு நடைபெற்ற தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 100% சித்தியினைப் பெற்றுக் கொண்ட அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியை **திருமதி கோசலா சிவலிங்கம்** அவர்களையும் அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டு வதில் பெருமிதமடைகின்றேன்.

விநாயகர் கட்டட ஒப்பந்தகாரர்
காரைநகர்
(பழைய மாணவன்)
23.11.2020



**செல்வி. இ.உதர்சனா**
**164 புள்ளிகள்**

## கல்வி

O/L PAPER CLASSES (PERSONAL)
வரலாறு, புவியியல், சித்தரம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படும்.
தொடர்பு:077 9889 276

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு. பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்பு காணி கிணறுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 702 3565

## சமையல் பராமரிப்பு

கொழும்பில் உள்ள வீடொன்றிற்கு தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டு வேலைகளைச் செய்யக் கூடிய தமிழ்ப் பணிப் பெண் தேவை.
ரூபா.20.000/= - 25.000/= இற்குள் சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 936 9984

# நினைவஞ்சலி

## 12ஆம் ஆண்டு 1ஆம் ஆண்டு





தோற்றம் 07.05.1920 மறைவு 12.05.2008

### தம்பு இரத்தினலிங்கம்

(உரிமையாளர்-பொப்பியூலர் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்)

திதி: அட்டமி

காலத்தைப் பொன்னாகக் கருதி கடமையைக்
கண்ணாகக் கருதி வாழ்ந்தீர்கள் ஐயா!
கண்ணை இமை காப்பது போல் எம்மைக்
காத்து வந்தீர்கள் ஐயா!
காலன் உங்களை அணுகாமல்
காக்கும் சக்தியின்றிக்
காலமெல்லாம் கலங்குகிறோம் ஐயா!
பன்னிராண்டு என்றாலென்ன எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்களை மறவோமையா!
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து எம்மை
வழிநடத்திய எம் அருமை தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 26.05.1929 மறைவு 05.12.2019

திருமதி

### பத்மாவதி இரத்தினலிங்கம்

திதி: நவமி

காலத்தைப் பொன்னாகக் கடமையைக்
கண்ணாகக் காத்த தெய்வமே!
கண்ணிமை காத்ததுபோல்
எமைக் காத்த குலவிளக்கே!
வரம் தந்த உம்கரங்கள்
உரமாகிப் போனதேனோ?
பாலூட்டி. சீராட்டி. தலை தடவி மடியேந்தி
பாடாக உனைவருத்தி
பாசத்தை ஊட்டிய எமதன்னையே
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவோடு

127, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம் 15 . 06 . 1953

மறைவு 14 . 10 . 2020

## அமரர் திரு. ஞானகுலேந்திரன் ராஜதுரை (பிரான்ஸ்)

மண்ணிலே பிறப்புரிமை மாண்புடைய உறவு - உரிமை அன்புடைய கணவராய் மகள் சிந்துஜா. அனித்தா. மகன் பிறவீன் ஆகியோரின் அன்புப் பிதாவாய் பாசமிக்க தலைமகனாய் சிறப்பாக வாழ்ந்து உயிர் நீத்த உத்தமனை உனை நினைத்து மனம் உருகிக் கலங்குகின்றோம்.

34 யாழ் வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
077 510 5713 இ.தயானந்தன்

# மரண அறிவித்தல்



பிறப்பு . 02 . 04 . 1946

இறப்பு . 22 . 11 . 2020

## சுப்பிரமணியம் பூமணி

காரைநகர் களபூமி விளானையை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் பூமணி அவர்கள் 22.11.2020 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதி யரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம் சின்னக்குட்டி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிர மணியம் அவர்களின் மனைவியும், கேதீஸ்வரனின் தாயாரும், காலஞ் சென்றவர்களான கனகரட்ணம், பாலசிங்கம், கிருஷ்ணன், சிவஞானம் மற்றும் திருநாவுக்கரசு, நாகேஸ்வரி, அற்புதம், யோகராசா அவர்களின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி, பரமேஸ்வரி, சிவலிங்கம், நாகம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2020) திங்கட் கிழமை முற்பகல் 6.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேதீஸ்வரன்: 077 777 0394
அற்புதம் : 0777 497 461
களபூமி, விளானை, காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 05 . 1938

மறைவு 22 . 11 . 2020

## நாராயணபிள்ளை ஆனந்தன்

வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை ஆனந்தன் நேற்று (22.11. 2020) ஞாயிற் றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை பூரணத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணிதேவியின் அன்புக் கணவரும் தமயந்தி (சுவிஸ்). சாந்தினி. அரவிந்தன் (ஜேர்மனி). ஆனந்தி (ஜேர்மனி). துஸ்யந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகிழ் ராஜன். ஜெயக்குமார். பாமினி. சுரேஸ்குமார். இரத்தினகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பூபதி. யோகராசா. காலஞ்சென்றவர்களான இரத்தி னம். செல்லம்மா. பார்வதி. பூதப்பிள்ளை. சாவித்திரி. வைரமுத்து. சிவ மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அலேசியா (சுவிஸ்). டெனீசியா (சுவிஸ்). சயந்தன். விதுசனா. அபிசாளினி. அபிராமி (ஜேர்மனி). ராகவன் (ஜேர்மனி). ஆதவன் (ஜேர்மனி). சுயந்தன் (ஜேர்மனி). பவித்திரா (ஜேர் மனி). தர்சிகன். யதுசன். லாவண்யா. சாருயன் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற கிருஷ்ணராஜா மற்றும் தனலக்சுமி. சிவசுப்பிர மணியம். ஸ்ரீகௌரி. காலஞ்சென்ற லில்லிமலர் ஆகியோரின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.11.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உடுவில் குழந்தையேசு தேவாலயத்தில் நடைபெற்று உடுவில் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 647 3791

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற்
கல்லூரியில்
விரிவுரையாளராகக்
கடமையாற்றும்
**திரு.நா.மனோரஞ்சிதன்**
அவர்களின்
அன்பு மாமனார்.

**சிதம்பரம்**
**கிருஸ்ணபிள்ளை**

அவர்களின் மறைவுக்கு எமது விழிநீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**துயர் பகிரும்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்**

## மரண அறிவித்தல்

### திருமதி மார்க்கண்டு செல்லம்மா

சங்கானையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு செல்லம்மா அவர்கள் 22.11.2020 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரன்-முத்தம்மா தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், பாக்கியவதி, காலஞ்சென்ற புவனேஸ்வரி, கனகராசா, அருள்நேசராசா, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திரராசா, கலாரஜனி, ஜெயரஜனி, தயாநிதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## நேற்றும் 4 இறப்பு

### கொரோனா சாவு 87

கொரோனா, நவ. 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 87ஆக அதிகரித்தது. மேலும் 4 புதிய மரணங்கள் பதிவாகின. கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆண்களும், 2 பெண்களுமே சாவடைந்துள்ளனர்.

87 பேரில் 74 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சிக்கி கடந்த ஒரு மாதத்தில் (ஒக்டோபர் 22 நவம்பர் 22) மட்டும் பலியாகியுள்ளனர்.

கொழும்பு 15ஐச் சேர்ந்த 70 வயதுடைய பெண் ஒருவரும், கொழும்பு 12ஐச் சேர்ந்த 53 வயதுடைய ஆண் ஒருவரும், பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 84 வயதுடைய பெண் ஒருவரும் மற்றும் கொழும்பு 10ஐச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவருமே அவ்வாறு இறந்துள்ளனர். எனினும் ஒருவர் மட்டுமே நேற்று இறந்தார் என்றும் ஏனைய மூவரின் இறப்புக்களும் முன்னதாக இடம்பெற்றவை என்றும் சொல்லப்படுகின்றது.(ம-22)

## 30 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



கூட்டுறவாளர்
**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.வ.சங்க. சமாசம்)

தோற்றம்
06.10.1927

மறைவு
23.11.1990

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 30 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கோப்பாய் பிராந்தியம்**

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணபிள்ளை தவனேஸ்வரி



வட்டுக்கோட்டை, சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை தவனேஸ்வரி 22.11.2020 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், குருசாமி, இராஜேந்திரா, நாகேந்திரம், சண்முகராசா, சரஸ்வதி, தர்மராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2020) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டு வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**மூளாய் வீதி (மாவடி), வட்டுக்கோட்டை.**

**077 9862 895, 077 809 0497**

## 30 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06.10.1927


மறைவு
23.11.1990

கூட்டுறவாளர்
**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.வ.சங்க. சமாசம்)

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 30 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் .**

## இருபத்தைந்து ஆண்டுகள் நீங்கா நினைவுகளில்





அமரர்
**கனகசபை**
**சண்முகசுந்தரம் (சோமு)**
(ஸ்தாபகர், சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)

தோற்றம்:- 03.11.1941

அமரர்
**சண்முகசுந்தரம்**
**சிவரூபன் (டியூகோ)**
(மாணவன் - யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)

தோற்றம்:- 18.08.1983

மறைவு
23.11.1995

இருவரையும் இழந்து இடருடன் இணைந்து
இருபதும் ஐந்துமாய் உருண்டன ஆண்டுகள்
நெருங்கும் உங்கள் நினைவுகள் மனத்தில்
இருக்கும் நிலைக்கும் என்றும் எம்முடன்

**துர்க்கா இல்லம்,**
**இல.29, ஓட்டுமடம் வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

### புலிகள்...

வேண்டும்' என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் யோசனை முன்வைத்துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், வடக்கில் முன்னெடுக்கப்படும் நினைவேந்தல் நிகழ்வுக்கு தெற்கில் இருந்து எதிர்ப்புகள் கிளம்புகின்றமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு யோசனையொன்றை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிரிழந்தவர்களை நினைவுகூரும் உரிமை அனைவருக்கும் இருக்கின்றது. தெற்கிலும் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறுகின்றது.

குறிப்பாக அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியினர் தமது தோழர்களை நினைவு கூருகின்றனர். அதேபோன்றதொரு சூழ்நிலையை சுதந்திரத்தை வடக்கில் உள்ளவர்களும் எதிர்பார்க்கின்றனர்.

ஜே.வி.பி. என்பது தடைசெய்யப்பட்ட அமைப்பு அல்ல. தடை நீக்கப்பட்டுள்ளது. ஆனால் புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். எனவே, சுமந்திரன், விக்னேஸ்வரன், பொன்னம்பலம் போன்றவர்கள் நீதிமன்றம்சென்று புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு வழக்குத் தாக்கல் செய்யவேண்டும். வெளிநாடுகளில் இவ்வாறு வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றது. இல்லையெனில் இந்தப்பிரச்சினை தொடரும்.

அதேவேளை, புலிகளின் பெயர், கொடி, கொள்கைகள் பற்றி கதைக்காமல் உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் நினைவுகூரலாம். அது தவறு இல்லை. இதற்குள் அரசியல் திணிக்கப்பட்டால்தான் அது சர்ச்சைக்குரியதாக மாறும்' என்றார். (த-44)

### 20,000...

கொழும்பு, நவ. 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்றும் 395 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரை 16 ஆயிரத்து 651 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. இதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 166ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 14 ஆயிரத்து 69 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 10 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 87 பேர் உயிரிழந்தனர். (ம-22)

## மரண அறிவித்தல்



### சிதம்பரம் கிருஷ்ணபிள்ளை

**(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், தேர்தல் திணைக்களம் சமாதான நீதவான்)**

ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரம் கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் தேர்தல் திணைக்களம்) 21.11.2020 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரம் -சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், மாசிலாமணியின் அன்புக் கணவரும், சுமதி (முகாமைத்துவ உத்தியோகத்தர், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்), முகுந்தன் (பிரான்ஸ்), வாசுகி (ஆசிரியை, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நற்குணராஜா (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), அனுசியா (பிரான்ஸ்), மனோரஞ்சிதன் (விரிவுரையாளர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி,கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஐந்தூரியா, ராகுல், சங்கவி, துளசிராம், மானுஷா, மானஷி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.11.2020 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி.ப 3.00 மணியளவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**

**மாசிலகம், ஆவரங்கால், புத்தூர். குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### நடராஜா அருள்நாதன்

**(அபிகிசாந் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்)**

யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும், இல.16, ராணி வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா அருள்நாதன் அவர்கள் நேற்று (22.11.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா தர்மேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சந்தானம் யோகமலர் தம்பதியரின் பாசமிகு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், கவின்பிரகாஷ் (பிரான்ஸ்), அருச்சுன் (உரிமையாளர், அபி கிசாந் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்), சுகனியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சயந்தமதி (பிரான்ஸ்), சத்தியா, திலக் சுபராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிஷான், கியாஸ், கீர்திக், கியான், அக்ஷயா, அபிகிஷாந், அகானா ஆகியோரின் அன்பு பேரனும், அருந்தவமலர் (உரிமையாளர், சிறி சுகந்தி கட்டடப் பொருள் விற்பனை நிலையம்), அருந்தவநாயகி (பிரான்ஸ்), அருந்தவராணி (சுவிஸ்), ரஞ்சினிதேவி (கனடா), பாமினி (சுவிஸ்) காலஞ்சென்ற பாலச்சந்திரன் (சுவிஸ்) பாலேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2020) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**16, இராணி வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர். 0760643650**

# மாவீரர்களை இலங்கைக்குள் அஞ்சலிக்க அனுமதியில்லை!

## வேண்டுமெனில் வெளிநாடுகளுக்கு செல்லுங்கள் என தமிழர்களிடம் சொல்கின்றது ராஜபக்ச அரசு



கொழும்பு, நவம்பர் 23

'தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் நாள் நிகழ்வை இலங்கையில் நடத்த நாம் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம். தடைகளை மீறித் தமிழ் மக்கள் மாவீரர்களை இங்கு நினைவுகூர முடியாது. அவர்கள் விரும்பினால் வெளிநாடுகளுக்குச் சென்று மாவீரர்களைச் சுதந்திரமாக நினைவேந்தலாம். அங்கு அவர்களுக்குத் தடைகள் இருக்காது இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

'போரில் உயிர்நீத்த உறவுகளை நினைவேந்தத் தமிழ் மக்களுக்கு உரிமை இருக்கின்றது. அது அவர்களின் சொந்த உரிமை. அதில் அவர்கள் ஏதோவொரு வழியில் சாதித்துக் காட்டுவார்கள். அதை ஜனாதிபதியோ அல்லது அரசோ அல்லது வேறு ஆட்களோ தடுத்து நிறுத்த முடியாது' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே அமைச்சர் தினேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையிலிருந்து தப்பிச் சென்று வெளிநாடுகளில் அடைக்கலம்கோரி அங்கு வாழும் சில முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோரின் தாளத்துக்கு இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் மக்களும் ஆடுகின்றார்கள்.

இந்த நாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும்.

எனவே, இங்கு அவர்களை நினைவுகூர அனுமதி இல்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை வெளிநாடுகள் தடை செய்திருந்தாலும் அங்கு வாழும் தமிழர்கள் மாவீரர் நாளை பகிரங்கமாக நினைவுகூருகின்றார்கள் என்பதற்காக இங்கு நாம் அனுமதி வழங்க முடியாது.

இங்கு மாவீரர் நாள் நிகழ்வை நடத்த கடந்த நல்லாட்சியில் அனுமதி வழங்கப்பட்டிருந்தமை படுமுட்டாள்தனமாகும். அது ஆட்சியில் இருக்கும் தம்மைக் காப்பாற்றி வந்தமைக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ரணில் அரசு வழங்கிய நன்றிக் கடனாகும்.

நாட்டின் சட்டத்தை மீறி நீதிமன்றத் தடையுத்தரவுகளை மீறி மரணித்த விடுதலைப்புலிகளை நினைவுகூருவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்றார். (ம-22)

# விபத்தில் காயமடைந்த மூதாட்டி உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், நவ. 23

சித்தங்கேணிச் சந்தியில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த மூதாட்டி சிகிச்சை பயன் இன்றி இன்று உயிரிழந்தார். அவருக்கு வயது 73. வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் வசிக்கும் விஜயரட்ணம் தவனேஸ்வரி என்ற மூதாட்டியே உயிரிழந்தவராவார். (ம-27)

## இனப்படுகொலையை...

தனது நூலில் இது தொடர்பில் ஒபாமா மேலும் தெரிவித்ததாவது:

'சோமாலியா போன்ற தோல்வி கண்ட அரசுகளை மீளக்கட்டியமைப்பதற்கோ அல்லது இலங்கை போன்ற நாடுகளில் இனரீதியான படுகொலைகளைத் தடுப்பதற்கோ ஐ.நாவின் உறுப்பு நாடுகளிடையே வழி முறைகளோ அன்றி கூட்டு விருப்பமோ இருக்கவில்லை' என்று முன்னாள் அதிபர் ஒபாமா தனது நூலில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இலங்கை 'இனப்படுகொலை' என்பதை ஒபாமா 'ethnic slaughter' என்ற ஆங்கில வார்த்தையிலேயே குறிப்பிட்டி ருக்கிறார்.

உலக நெருக்கடிகளின் போது ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள், தீர்மானங்கள் குறித்து விவரிக்கும் அத்தியாயங்களில் இலங்கைத் தமிழர் படுகொலைகளை ஒபாமா சுட்டிக்காட்டியிருப்பது உலக அளவில் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது.

தனது பதவிக்காலத்தின் முதல் ஐந்து ஆண்டுகால அனுபவங்களை விவரிக்கும் அவரது நூலின் 768 பக்கங்கள் கொண்ட முதற்பாகம் ஆங்கிலத்திலும் வேறு 24 மொழிகளிலும் அச்சிடப்பட்டும் கடந்த செவ்வாயன்று வெளியாகியது.

சமகால உலகத் தலைவர்கள் பற்றிய தனது எண்ணங்கள், தனது பதவிக்காலத்தில் பூகோள அரசியல் குறித்து எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள், சொந்த வாழ்க்கைப் பின்னணி எனப் பல தகவல்களின் பதிவுகளை உள்ளடக்கிய அந்த நூலில், தென்னாசிய அரசியல் மையமான இலங்கை குறித்தும் அதன் இறுதிப் போர் பற்றியும் ஒபாமா என்ன கூறப்போகிறார் என்று நூல் வெளியாகுவதற்கு முன்பிருந்தே பெரும் எதிர்பார்ப்பு நிலவி வந்தது.

இலங்கையில் தமிழ் மக்கள் வகை தொகையின்றிக் கொன்றொழிக்கப்பட்ட இறுதி யுத்த காலப்பகுதியில் அமெரிக்க அதிபராகப் பதவியில் இருந்த ஒபாமா, வன்னியில் பாதுகாப்பு வலயங்களுக்குள் கனரக பீரங்கிகள் மற்றும் ஷெல் தாக்குதல்களை தவிர்க்குமாறு அப்போதைய அதிபர் மஹிந்த ராஜபக்சவிடம் கேட்டிருந்தார்.

இறுதிப்போரை நிறுத்துவதற்கு ஒபாமா தலையிடுவார் என்ற தீவிர எதிர்பார்ப்பு ஈழத் தமிழ் மக்களிடம் மட்டுமன்றி பிராந்திய நாடுகள் மத்தியிலும் காணப்பட்டது.

தற்சமயம் இலங்கை இனப் படுகொலையை ஐ.நாவின் தோல்வி என்று ஒபாமா மதிப்பிட்டிருப்பது ஈழத் தமிழர் படுகொலை விவகாரத்தை மீளவும் சர்வதேச மையப்படுத்தி இருப்பதுடன் இலங்கைப் போர் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு மேலும் வலுச் சேர்த்திருக்கிறது என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (ம-இ)

## முல்லைத்தீவு....

அழைக்கப்படும்) இன்று நள்ளிரவு அல்லது நாளை அதிகாலை முல்லைத்தீவு, வடமராட்சி கரையோரமாக இந்தியாவின் தமிழக மாநிலத்தின் வேதாரணியம் கடற்பகுதி ஊடாக கரை கடக்கக் கூடும். இதனால் இன்றிலிருந்து யாழ்ப்பாணத்தில் பரவலாக மழையை எதிர்பார்க்கலாம். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கம் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து 638 கி.மீ. தொலைவிலும், முல்லைத்தீவிலிருந்து 576 கி.மீ. தொலைவிலும், திருகோணமலையிலிருந்து 529 கி.மீ. தொலைவிலும் காணப்பட்டது. தற்போதைய நகர்வு நிலையின் அடிப்படையில் இது தாழமுக்கமாகவே காணப்படுகின்றது. ஆனால் கடல் மேற்பரப்பு வெப்பநிலை 30 பாகை செல்சியஸ் ஆகக் காணப்படுவதனால் இது மேலும் விருத்தியடையும் வாய்ப்பு அதிகம் உண்டு. மாதிரிகளின் அடிப்படையில் இதன் நகர்வு புதியதாக காணப்படுகின்றது. வடக்கு வடமேற்கு திசையில் கடற்பகுதியில் நகரும் இந்த தாழமுக்கம் புல்மோட்டைக்கு நேராக நிலப்பகுதி நோக்கி நகர்ந்து 22ஆம் திகதி நள்ளிரவு முல்லைத்தீவு கரையோரத்துக்கு சமாந்தரமாக வடமராட்சி கிழக்கு வரை நகர்ந்து பின்னர் வடக்கு நோக்கி நகர்கின்றது.

திருகோணமலை, முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி கரையோரப்பகுதிகளில் கன மழையும் கடும் காற்றும் வீசக் கூடும். முல்லைத்தீவுக்கு 160 மி.மீ. க்கு கூடுதலாகவும், வடமராட்சி கிழக்கிற்கு 145 மி.மீ. க்கு கூடுதலாகவும் கிளிநொச்சிக்கு 115 மி.மீ. க்கு அண்மித்தும் மழை கிடைக்க வாய்ப்புண்டு. (தாழமுக்க விருத்திக்கேற்ப இவை மாற்றமடையலாம்).

அதே சமயம் முல்லைத்தீவில் இன்று காற்றின் வேகம் மணிக்கு 60 கி.மீ. வேகத்தை விட கூடுதலாகவும், சாளை, சுண்டிக்குளம், வடமராட்சி கிழக்கு மற்றும் பருத்தித்துறை பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60 கி.மீ. இனை விட கூடுதலாக வீச வாய்ப்புண்டு. வடக்கின் ஏனைய பகுதிகளிலும் இக்காலப்பகுதியில் கன மழையுடன் காற்றின் வேகமும் அதிகரித்துக் காணப்படும். எனவே முன்னெச்சரிக்கையாக எங்கள் வீடுகளுக்கு அண்மித்துக் காணப்படும் கடும் காற்றால் பாதிக்கப்படும் மரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றார். வளிமண்டலவியல் திணைக்களமும் இது தொடர்பில் வடக்கு மாகாணத்துக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஓ.5)

## பாடசாலைகள்....

சியமில்லை என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தல் பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கு நாளை பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் (மேல் நிலை பாடசாலைகளுடன் இயங்கும் ஆரம்ப பிரிவுகள் உட்பட) மறு அறிவித்தல்வரை பாடசாலைக்குச் சமூகமளிக்கவேண்டியதில்லை என்று தெரிவித்துள்ளார். இந்த விடுப்பு ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கு சிறப்பு விடுப்பாக கணிக்கப்படும். அவர்கள் பாடசாலை அதிபர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## புதிய அரசமைப்பை..

தயாரிக்கும் வேலைத்திட்டம் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஸ்ட துணைத்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காக பொதுமக்களிடமிருந்து யோசனைகளை பெறும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் 1978ஆம் ஆண்டு இறுதியாக ஓர் அரசமைப்பு கொண்டுவரப்பட்டது. அது 20ஆவது திருத்தங்களுடன் இன்றும் உள்ளது.

புதிய அரசு வந்ததன் பின் புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசமைப்புயோசனைகளை முன்வைக்கும் வகையில் ஆராய்கின்றது. இதற்கென புதிய அரசமைப்புக் குழுவொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட கிளை தெரிவுசெய்துள்ளது. இந்தக் குழுவில் சிரேஸ்ட சட்டத்தரணி பே.பிரேம்நாத், சட்டத்தரணி கமலதாசன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், அரசியல் விஞ்ஞான பட்டதாரியுமான ஞா.சிறிநேசன், வடக்கு கிழக்குமாகாண முன்னாள் காணி ஆணையாளர் குருநாதன், கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் கிருஸ்ண மோகன் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அந்த அரசமைப்பை கூட்டமைப்பின் தலைமை ஆராய்ந்த பின்னர் அவர்கள் அனைத்தையும் இணைத்து அரசிடம் வழங்குவர். இதில் சிறுபான்மையின மக்களின் அபிலாசைகளை அரசமைப்பு ரீதியாக உறுதிப்படுத்த வேண்டும் என்பதை நாங்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். மாகாணசபை முறைமை, அதற்கு வழங்க வேண்டிய அதிகாரங்கள், அரசின் தன்மை, அடிப்படை உரிமைகள், மொழி, அரச கொள்கை வழிகாட்டி கோட்பாடுகள், அதிகாரங்களைப் பன்முகப்படுத்தல், அதிகாரப்பரவலாக்கம், அதிகாரப்பகிர்வு, நீதித்துறை போன்ற பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு அதற்கான வரைவுகள் வரையப்பட்டுள்ளன. என்றார். (த)

## விபத்தில்...

பகுதியில் நேற்று இடம்பெற்றது.

40 வயதுடைய குடும்பத்தலைவரே இறந்தவராவார். அவரது குடும்பம் மன்னாரில் உள்ளது. இறந்தவருக்கு கொரோனாத் தொற்றா என்பது தொடர்பில் பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-இ)

## தவறான...

பிரதீஸ் (வயது - 38) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை. இவரது இறப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (த-26)

## ஏணை கட்ட....

துடைய இராமசாமி மோகன்றாச் என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தவராவார். நேற்றுமுன்தினம் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. படுகாயமடைந்த குறித்த குடும்பத்தலைவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். (ம-19)

## பஸில்...

2021ஆம் ஆண்டு ஜனவரியில் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவார் எனவும் ஜனவரி முற்பகுதியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அமைச்சரவையை மறுசீரமைக்கவுள்ளார் என்றும் தெரியவருகின்றது. அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் எந்தவொரு அமைச்சையும் தனக்குக் கீழ் வைத்துக்கொள்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. இதன்படி பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் துறைசார் அமைச்சு பதவிகளை ஜனாதிபதி வகிக்கவுள்ளார்.

தற்போது இராஜாங்க அமைச்சராக இருக்கும் சரத்வீரசேகர சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமிக்கப்படுவார் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. பஸில் ராஜபக்சவுக்கும் பலம்பொருந்திய அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஆளுங்கட்சி பக்கம் தாவிய டயானா கமகேவுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவுள்ளது. பஸில் நாடாளுமன்றம் வருவதற்காக, பொது ஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தனது பதவியை துறக்கவுள்ளார் என்று முன்னரே தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த44)

## சாவகச்சேரியில்...

பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

புலோப்பளை கிழக்கு பளையைச் சேர்ந்த புலோமினராசா எஸ்ரோன் (வ்யது 43) என்பவரே டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தார்.

இவர், காய்ச்சல் காரணமாக கடந்த 18ஆம் திகதி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 5ஆம் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

அவர் கொரோனா தொற்றால் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டதால், சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கு சடலம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு கொரோனா காரணமாக அவர் உயிரிழக்கவில்லை என்பது தெரியவந்தது. இந்தநிலையில், சடலம் நேற்று உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே அவர் டெங்குக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார் என்பது தெரியவந்தது என்று மருத்துவமனைத் தரப்பு தெரிவித்தது.

இந்த வருட ஆரம்பத்திலும் ஒருவர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்திருந்தார். இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் இந்த வருடம் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2ஆக உயர்ந்துள்ளது. மழை காலம் ஆரம்பித்துள்ளதால், கொரோனாத் தொற்று போன்று டெங்குத் தொற்றிலிருந்தும் கவனமாக இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு வந்த நிலையில், கொரோனா தொற்றுக் காலத்தில் டெங்கு இறப்பும் பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்த மாதம் 12 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த வருடம் இதுவரை 2 ஆயிரத்து 109 பேர் டெங்குத் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் புள்ளி விவரம் குறிப்பிடுகின்றது. (ம-த-26)

# 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

மலர்வு
17
.
05
.
1932



உதிர்வு
24
.
10
.
2020

## அமரர் பத்மாசினி (பத்தி) பாலசிங்கம்

**அன்னார் காலஞ்சென்ற சின்னையா பாலசிங்கம் (பாலா) ஓய்வுபெற்ற தோட்ட அதிகாரி (பீனகந்த குறூப் நிவித்திகல) யின் பாசமிகு மனைவியார்.**

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"
என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க
"மம்மி" யாய், அப்பம்மாவாய், அன்ரியாய்
குஞ்சியம்மாவாய், அப்பாச்சியாய், நண்பர்கள்
வட்டத்தில் 'பத்தி' யாய் வாழ்வாங்கு வாழ்ந்து
விண்ணகத்தே சென்றதென்ன?

வேதனையால் வெம்பியழவும்
சோகத்தால் சோர்ந்து விழவும்
எம்மை விட்டு செல்லத் துணிந்த தென்ன?
மண்ணில் பிறந்தவர்கள் மண்ணில் அடக்கம்
இது உலக நியதி

இப்பூவுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த நீவிர்
என்றும் எமதுள்ளத்தில்
அணையா நம்பிக்கை தீபமாய் திகழ்வீர்கள்

இறுதிச் சடங்கிலிருந்து இன்றுவரை பல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**36, கரவெட்டி வடக்கு,**
**கரவெட்டி.**

**துயரில் வாழும்**
**மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர், நண்பர்கள்.**

# கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் கமநல சேவைகள் நிலைய பிரிவிற்குட்பட்ட இருபாலை கிழக்கு கமக்காரர் அமைப்பின் தலைவர் **பெரியதம்பி பரமநாதன்** அவர்களின் மனைவி

## திருமதி பரமநாதன் கமலாதேவி

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரும்பிராய் கமநல சேவைகள் நிலைய சமூகம்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு
.
13
.
10
.
1971



இறப்பு
.
16
.
11
.
2020

## சற்குணநாதன் வேணுகோபன்

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சற்குணநாதன் வேணுகோபன் அவர்கள் 16.11.2020 அன்று லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சற்குணநாதன் இரத்தினபூபதி (கிளி) தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், மைதிலியின் ஆருயிர் துணைவரும், விஷாலி, வைஷ்ணவி, திவ்வியா, வெங்கடேஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் நீலாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும், விஜயரஞ்சினி, நவரஞ்சினி, நந்தகோபன் (அமரர்) நந்தினி, சிறிரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இரத்தினகுமார், சோதீஸ்வரன், சிறீகாந்தன், ஜயீசன், மயூரன், சஞ்சய், வரதன், பவானி, ஜெயந்தினி, லக்சிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், தஷா, லிஷா, மேனன், கார்த்திகா, மானசி, மாசிலன், நிதுஷன், ஷான், தாரகன், திரிசா, தாரணி, நகுலன், சுவேத்தா, சுஜித், கிருஷ்ணி, மாதங்கி ஆகியோரின் பாசமிகு மாமாவும் அவயாநிலாவின் Grand-Uncle ம் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2020) திங்கட் கிழமை லண்டனில் (Angel, Funeral care,188 Alexandra Avenue Harrow Ha 2 9 BN) நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## பொலிஸார் - பொதுமக்கள் இடையே சிலியில் மோதல்

சிலியில் அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஓய்வூதியம், சுகாதாரம், கல்வி முறை ஆகியவற்றில் சீர்திருத்தம் கோரி கடந்த ஓராண்டுக்கும் மேலாக அங்கு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், தலைநகர் சாண்டியாகோவில் அரசுக்கு எதிராக கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது கற்களை வீசித் தாக்கியதால் இருதரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனையடுத்து கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தண்ணீரை விசிறியும் பொலிஸார் கூட்டத்தை கலைத்தனர். (வ-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
.
30
.
07
.
1972



மறைவு
.
22
.
11
.
2020

## செல்வநாயகம் றஜீபன்

தையிட்டியை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் றஜீபன் அவர்கள் 22.11.2020 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வநாயகம் ரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் மல்லிகாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், கலாராணியின் (ஆசிரியை-கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாசாலை) அன்பு கணவரும், ஆதித்தன் (யாழ் இந்துக் கல்லூரி), ஓவியா (யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், தீபனா (பிரான்ஸ்), பிரதீபன் (லண்டன்), மகிந்தன் (பிரான்ஸ்), மதுரன் (பிரான்ஸ்), அரவிந்தன் (ஆசிரியர்) ஆகியோரின் சகோதரனும், சசிதரன் (பிரான்ஸ்), நிறோ (லண்டன்), கலாமதி (பிரான்ஸ்), பகிதரன் (பிரான்ஸ்), கலாநிதி (பிரான்ஸ்), கலாயோதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஜெயவர்த்தனா (பிரான்ஸ்), தர்சி (பிரான்ஸ்), அசோக்குமார் (பிரான்ஸ்), கோகுலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும், அபூர்வன், ஆருவி, அகரன், துவாரகா, பாரதி, பரணி, கறூன், நிகேதன், ஒலிவியா கஜேந்திரன் ஆகியோரின் மாமாவும், சிவசங்கர், ஜெனனி, அபிராமி, நிலானி, சுகன்யா, சுஜீபா, சுகிர்தன், அனோஜா, வித்யா, சூர்யா ஆகியோரின் சிறிய தந்தையாரும், சக்தி, அருவியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2020) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 9236333**

**கலட்டி லேன், கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்**

# மரண அறிவித்தல்

மண்ணில் : 13.05.2013



விண்ணில்
.
21
.
11
.
2020

மண்ணில் : 06.09.2015



## சேக்ஸ்பியர் சர்வின் சேக்ஸ்பியர் நெர்வின்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேக்ஸ்பியர் சர்வின் சேக்ஸ்பியர் நெர்வின் ஆகியோர் 21.11.2020 சனிக்கிழமை அகால மரணமானார்கள்.

இவர்கள் சேக்ஸ்பியர் (ராஜ்குமார்) டயானா குயின் றோஸ் (குடும்ப நல உத்தியோகத்தர் ஆதார வைத்திய சாலை ஊர்காவற்துறை) தம்பதியரின் அன்பு மகன்களும், அஸ்மிதா (மண்டைதீவு R.C. மகாவித்தியாலயம்) வின் சகோதரர்களும், காலஞ்சென்ற லாசறஸ், மரிய திரேசா காலஞ்சென்ற மரியநாயகம், செபமாலையம்மா ஆகியோரின் பேரன்களும், யொய்சி, சறோஜினி, சுலோசினா, யூசினா, ஜசினா, கசில்டா மேரி திரேசா, காலஞ்சென்ற பீற்றர்தாஸ், காலஞ்சென்ற பிறேமானந்தன், ரவி, இயேசுதாசன், உதயசெல்வம், யூட் ஆகியோரின் மருமக்களும், ஜெனிஸ்பியரின் சிறிய மக்களும், காலஞ்சென்ற செல்வசோதி, ஆன் மேரி விக்ரர் இயேசுதாசன் மோட்சை இன்பம் காலஞ்சென்ற தேவநாயகம், சுகந்தி, ஜெயரட்ணம், றெனோவா (பிரதேச வைத்திய சாலை நெடுந்தீவு) காலஞ்சென்ற இதயராஜ் அனோஜன், றோசன்னா (ஆசிரியை முழங்காவில்) ஆகியோரின் பெறா மக்களும், அஜந்தா (இத்தாலி) பிரசாத் (அவுஸ்திரேலியா) மயூறி (இத்தாலி) கியூறி (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி), டிம்சி, பிறின்சி (யாழ் பிரதேச செயலகம்), டிலக்சனா (யாழ் பல்கலைக்கழகம்) டினுஜா, சிலோஜன், சிந்துஜன், சானுஜன், தனுஜன் கபிசன், யதுர்சிகா, துசிகா, டியோன் ஆகியோரின் மைத்துனர்களும், நிசாந்தன் (ஜேர்மன்) சிந்துஜா, சிந்துஜன் (கொழும்பு பொருளியல் பீடம் பல்கலைக்கழகம்) காலஞ்சென்ற கவிதா, யசிதா, ஜீவா காலஞ்சென்ற உசாந்தன் நியூட்ட, இதயன், ஜெறின், ஜெலக்சன், ஜெலக்சனா, ஜெனுசன், சிரித்திரன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரர்களும் ஆவார்.

இவர்களின் திருவுடல்கள் 23.11.2020 திங்கட்கிழமை பி.ப.2.30 மணியளவில் புனித பேதுருவானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**1ம் வட்டாரம்,**
**மண்டைதீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



# மும்பையை வீழ்த்தி யுனைடெட் வெற்றி

புதுடில்லி, நவ.23
ஐ.எஸ்.எல். கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் மும்பையை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி நோர்த் ஈஸ்ட் யுனைடெட் அணி வெற்றி பெற்றது.
7 ஆவது ஐ.எஸ்.எல். கால்பந்து தொடர் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது. இந்தத் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் வரை நடைபெறவுள்ளது.
கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த ஆண்டுக்கான போட்டிகள் அனைத்தும் கோவாவில் ரசிகர்கள் இன்றி நடைபெற்று வருகிறன.
திலக் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற லீக் ஆட்டத்தில் நோர்த் ஈஸ்ட் யுனைடெட் அணியும், மும்பை சிட்டி அணியும் மோதின.
முதல் பாதி முடிவில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் 49 ஆவது நிமிடத்தில் நோர்த் ஈஸ்ட் யுனைடெட் அணி ஒரு கோல் அடித்தது.
இறுதியில், மும்பை சிட்டி அணியை 1p0 என்ற கோல் கணக்கில் நோர்த் ஈஸ்ட் யுனைடெட் அணி வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தது. (ந-இ)

# இறுதிச் சுற்றுக்குள் டொமினிக் தீய்ம்



லண்டன், நவ.23
உலகின் முதல் நிலை வீரரான ஜொகோவிச்சை வீழ்த்தி ஏடிபி ரென்னிஸ் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு டொமினிக் தீய்ம் தகுதி பெற்றுள்ளார்.
8 முன்னணி வீரர்கள் பங்கேற்கும் இந்தத் தொடரின் இறுதிச்சுற்று லண்டனில் நடைபெற்று வருகிறது.
நேற்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டம் ஒன்றில் ஜொகோவிச் (சேர்பியா) டொமினிக் தீய்ம் (ஒஸ்திரியா) ஆகியோர் மோதினர்.
முதல் செற்றில் 5:5 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தபோது, ஜொகோவிச்சிடம் இருந்து டொமினிக் தீய்ம் போராடி 7:5 என்ற கணக்கில் முதல் செற்றை வென்றார்.
இதையடுத்து, இரண்டாவது செற்றை ஜொகோவிச் 7:6 என்ற கணக்கில் தன்வசப்படுத்தினார்.
வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் சிறப்பாக ஆடிய டொமினிக் தீய்ம் 7:6 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றினார். இறுதியில், டொமினிக் தீய்ம் 7:5 6:7 (10), 7:6 (5) என்ற செற் கணக்கில் ஜொகோவிச்சை வீழ்த்தினார். இந்த வெற்றி டொமினிக் தீய்மின் 300 ஆவது வெற்றி ஆகும். இதன்மூலம் டொமினிக் தீய்ம் ஆண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார். (ந-இ)

## வேலைவாய்ப்பு

அரச அங்கீகாரம்பெற்ற கம்பனியில் குறைந்த பட்ச தகைமையுடன் 6 பதவி வெற்றிடங்கள். 23-40 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:
**077 1328 912, 077 4088 241**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை சந்திக்கு அருகாமை நவாலி மெயின் றோட்டுடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (ஆனைக்கோட்டை சந்தியிலிருந்து 70 மீற்றர் தூரம்). தரகர் தேவையில்லை.
**தொடர்பு:**
**077 6234 204, 077 2880 152**



## ஜேர்மன் லீக்:
# 16 வயதில் விளையாடி மவுகோகோ சாதனை

ஜேர்மனி, நவ.23
ஜேர்மனியின் முன்னணி பண்டேஸ்லிகா கால்பந்து லீக்கில், கமரூன் நாட்டில் பிறந்து ஜேர்மனில் வசித்து வரும் யூசோயபா மவுகோகோ விளையாடிச் சாதனை படைத்துள்ளார். இவர் 16 வயதில் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.
இந்த லீக்கில் பொருஸ்சியா டார்ட்மண்ட் முக்கியமான அணிகளில் ஒன்று. நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பொருஸ்சியா டார்ட்மண்ட் ஹெர்தா அணியை எதிர்கொண்டது.
இதில் பொருஸ்சியா டார்ட்மண்ட் அணி 5p2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
அந்த அணியின் எர்லிங் ஹாலண்ட் நான்கு கோல்கள் அடித்தார். ஹாலண்ட் 85 ஆவது நிமிடத்தில் வெளியேறினார். அவருக்குப் பதிலாக யூசோயபா மவுகோகோ களம் இறங்கினார். பண்டேஸ்லிகா லீக் வரலாற்றில் மிகக் குறைந்த வயதில் களம் இறங்கிய வீரர் என்ற பெருமையை யூசோயபா மவுகோகோ பெற்றுள்ளார்.
பொருஸ்சியா அணியின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான அணியில் இடம்பிடித்து 88 ஆட்டங்களில் 141 கோல்கள் அடித்துள்ளார். கடைசி நான்கு போட்டிகளில் மட்டும் 13 கோல்கள் அடித்துள்ளார். (ந-இ)

குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல்
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

வழ.இல: நானாவிதம்/402/2020

1. ஸ்ரீரங்கநாதன் பாலமுரளி
தலைவர் - ஸ்ரீ வெங்கடேஸ்.
பெருமாள் தேவஸ்தானம்
40/7, வாய்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

2. இரத்தினகோபால் இராகவன்
செயலாளர் - ஸ்ரீவெங்கடேஸ்வர
பெருமாள் தேவஸ்தானம்
158, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

3. தியாகராஜா தயாபரன்
உப-தலைவர் - ஸ்ரீவெங்கடேஸ்வர
பெருமாள் தேவஸ்தானம்
244, தேசிய வீடமைப்புத் திட்டம்,
ஸ்ரீராமபுரம், காத்தார் சின்னப் புதுக்குளம்,
வவுனியா.

4. பெரியதம்பி கோவிந்தசாமி
நிர்வாகசபை உறுப்பினர் - ஸ்ரீ வெங்கடேஸ்வர
பெருமாள் தேவஸ்தானம்
155, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

5. இரத்தினகோபால் பட்டாபிராமன்
நிர்வாகசபை உறுப்பினர் - ஸ்ரீவெங்கடேஸ்வர
பெருமாள் தேவஸ்தானம்
4, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

வழக்காளிகள்

எதிர்.

1. தில்லைநாதன் சிவரூபன்
64, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

2. நடராஜா கோபிநாத்
17/11, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.

3. செல்லையா ரமணீசன்
257-259, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

எதிராளிகள்

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளிகளினால் **மேலே** குறிப்பிடப்பட்ட 1 தொடக்கம் 3 வரையான எதிராளிகட்கு எதிராக வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் கோவிலின் ஆதீன மகாசபை உறுப்பினர்களின் பிரதிநிதித்துவப்படுத்தி இவ்வழக்கைத் தாக்கல் செய்து 19.07.2020ம் திகதியன்று குறித்த எதிராளிகளால் நடாத்தப்பட்டதாக கூறப்படுகின்ற விசேட பொதுக்கூட்டம் சட்ட முரணானது எனவும் குறித்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சட்டவலிதற்றவை எனவும் பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தீர்மானம் தொடர்பில் குறித்த கோயிலின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிமுறைச்சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது எதிர்வரும் 03.12.2020 ம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"

திகதி 2020.11.18

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.